# முகடு

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

Mukadu

இருமாத இலக்கிய இதழ்.  வைகாசி-ஆனி 2016  ஓலை – 11



# உள்ளே...

முகடு:வைகாசி-ஆனி : 2016


கட்டுரை

பிரஞ்சுக்கல்வித்திட்டம்
லக்ஷ்மன் வித்

இலங்கைத்தமிழர்களின்
தற்போதைய
கல்வி மற்றும் கலாசார நிலை
கிருத்திகன் நடராஜன்

புலம்பெயர் நாடும் வளரும் இளம்
தலைமுறையினரும்
மதிவதனி

தலித்தியமும் ஈழ அரசியலும்
வேலன்

கவிதை

நெருப்பேறிய
கொஸ்கம சாலாவ
ஜெ.ஈழவன்
குமுதினி,அறிவுக்களஞ்சியம்
ஈழபாரதி

நேர்காணல்

நிஜத்துடன்நிலவனுடன் நேர்காணல்
தமிழ்மாறன்

புகழ் தேடிப்புனையும் பெண்ணியத்தை
மறுதலிப்பேன்
யாழ் தர்மினி பத்மநாதன்

நிகழ்வு

நாவலர் குறும்பட விருதுகள்
வண்ணா

கதைகள்

இழப்பு
டானியல் அன்ரனி

லண்டனில் பிள்ளையார்
பாலன் தோழர்

மதிப்புரை குறும்படம்

“பூக்களைக்
கொய்யாதீர”
“நானாக நான்”
வண்ணா




## பேர்கள் வரலாற்றை நீட்டிச்செல்கின்றது

உண்மை எவ்வளவு ஆற்றலோடு இயங்கினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனம் மனிதனுக்குள் அந்நியப்பட்டுத்தான் இருக்கின்றது. ஆனாலும் போர்வாழ்வின் அனுபங்கள் எழுத்துப்பிரதிகளாக, நாளந்தம் உற்பத்தி நடைபொற்றுக் கொண்டிருக்கின்றது.அவ்வாறாக உற்பத்திக்கு உள்ளாகும் எழுத்துக்கள் எத்தனை சதவீதம் உண்மையை காண்பிக்கப்போகின்றது என்பது ஓர் பெரும் கேள்வியே.

சமகாலத்தில் எழுதப்படும் ஈழம் சார்ந்த எல்லா எழுத்துப்பிரதிகளும் பெரும் வாசிப்பனுபவம் உள்ளவர்களால் முழுமையான வாசிப்புக்குட்படுத்தி, அப்பிரதியின் கருத்துருவாக்கத்தை பொரும் விவாதத்திற்கு உள்ளாக்கி, உண்மைமை ஊருக்கு அடையாளப்படுத்த வேண்டிய தேவை கட்டாயமாக உள்ளது. அந்தவகைவில் முகடு இதழ் **"திறந்த வாசக மனம்"** எனும் தொனிப்பொருளில் நீங்கள் வாசித்த சமகால ஈழத்து இலக்கியப்பிரதிகள் மீதான உங்கள் வாசிப்பனுபவத்தை எழுத்து வடிவில் வேண்டி நிற்கின்றது.நீங்கள் பதிவாக்கும் ஒவ்வொறு தரவுகளும் எதிர்கால வாரலாற்றுத் தெளிவுக்கு பொரும் பங்காற்றும் என்பதை நினைவு கூறுவதோடு முகடு இதழ் எப்போதும் இளம்படைப்பளிகளுடன் பயணிக்கும்

**உங்கள் அனுபங்களை mukadu.editer@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் நீங்கள் அனுப்பும் கருந்துப்பதிவுகள் தொடர்ந்து வரும் முகடு இதழில் வெளிவரும்**

"முகடு இளைஞர்களின் இலக்கியத்துடிப்பு"

## முகடு இரு மாத இலக்கிய இதழ்


ஆசிரியர் குழு

யோகு அருணகிரி
நி .வனஜன்
ப. பார்த்தீபன்
சு.வண்ணன்

இதழ் வடிவமைப்பு

நி . வனஜன்
ப .பார்த்தீபன்

ஒப்பு நோக்குனர்

சு.வண்ணா


**ஒரு மனிதனின் சுயமான ஆழ்ந்த சிந்தனைக்கும் அவன் கூரிய அவதானிப்புக்கும் எந்த புத்தகமும் மாற்றாக முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் மற்றவர்களின் பார்வையில் எழும் கருத்துக்கள் ஆய்வுகள் அனுபவங்கள் யாவும் தாம் வாழ்தல் எனும் அடிப்படையிலே எழும் விடயங்கள் அவை நமக்கான சிந்தனை அல்ல**

*"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தந்நோய் போல் போர்றாக்கடை "*


தொடர்புகளுக்கு
mukadu.editer@gmail.com

**தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**
**http://www .facebook .com / pages/தமிழஇலக்கிய இளைஞர் பேரவை**



**பதிவு எண் :- W912009128**

http://www.mukadu.com

அட்டை படம் – நன்றி இணையம்


"படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே உரித்துடையவர்கள்"

# நெருப்பேறிய கொஸ்கம சாலாவ

ஜெ..ஈழநிலவன்

ரணங்களை
சொல்லியும் கேட்டும்
சுதாகரித்துக்கொள்ள
முடியாது
நண்பா!

எங்கோ ஓர் மூலையில்
எங்கள் கதறல்
செவி வழி தொட்டபோது
அழுகை என்ற
அர்த்தம் மட்டும் புரிந்தாய்!

நல்லது
புத்தனின்
சீடர் புகட்டாதது
உன் தப்பில்லை!

சக மொழி நண்பா
சர்வாதிகார
சட்டை யிருந்தால்
இன்றே எரித்துவிட்டு
என்னோடு நட!

ஒன்றை ஒன்று
உரசிக்கொண்டு
வெடித்து சிதறியபோது
பல உயிர்கள்
முடித்துக்கொண்டதாக
முழங்கினாய்!

மூப்பது நிமிட
முழக்கங்கள்
உன் காதுக்களுக்கு
முடங்கியதால்
செத்துப் போவாதகவும்
உணர்ந்தாய்!

நிலம் அதிர்ந்து
நிற்கதியாக முன்னும்
ஒரு வேளை உணவு
உடலிற்கு வாங்கமுன்னும்
அந்தி மறைந்து
அடுத்த காலை காணுமுன்னும்
இழந்தவை
இமயமளவு என்றாய்

எப்படி
உன் சகமொழி நண்பன்
நான் இருந்திருப்பன்
குண்டுகள்
நேராக நெஞ்சு கிழிக்கும்
குழந்தை தூக்கிய
கைகள்
வலுவிழந்து உறவை
பிரிக்கும்
முப்பது வருடம்
முதுகின் மேல் பயமும்
செவியருகில் செல்லின்
சிணுங்கலும்!

உன்னை
நான் நண்பன்
என்று சொல்ல வெட்கப்பட்டேன்
இன்று
சாலாவ சொல்லிய
சாவு மணியில்
வடக்கிலும்
மக்கள் இப்படி
வருந்திருக்குமென்றாய்
உனக்காக
துக்கப்பட்டுக்கொள்கின்றேன்
நண்பன் என்னும்
என் தமிழ் நாகரீக மரபுடன்....




# நினைவுகளுடன்

""சமர்"
ஆசிரியர் : டானியல் அன்ரனி

---

இலக்கியச் "சமர்" புரிந்த இனிய தோழர்.
இளவயதில் போய்விட்டது கவலை.
1979 –ம் ஆண்டு முதல் யாழ் நகரிலிருந்து காத்திரமான கட்டுரைகளைத் தாங்கி வந்தது "சமர்".
பேராசிரியர் க. கைலாசபதி – க. சண்முகலிங்கம் உட்படப் பலரது ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்தது.
டானியல் அன்ரனியின் ""வலை" சிறுகதைத் தொகுதி அன்று பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது.
பல வருடங்களாக அவனோடு பழகியதும் – அவனது திருமண வரவேற்புபசாரத்தில் கலந்துகொண்டதும் –அவன் வாழ்ந்த நாவாந்துறையில் சில வருடங்கள் (1979 – 1983) யான் (சித்த ஆயுர்வேத) வைத்தியசாலை நடாத்தியதும் அவ்வேளைகளில் அவனோடு தினசரி பேசிக்கொண்டதும் இன்றுபோல் ஞாபகத்திலிருக்கிறது.

பாரிஸ் மாநகரில் வாழும் அவனது புதல்வர் தந்தையின் வழியில் இலக்கியத்துறையில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது..!

தம்பிராஜா–இளங்கோவன்

# இழப்பு

டானியல் அன்ரனி

கருக்கலின் மென் இருட்டு. கனத்த மௌனத்தைக் கிழித்துக் கொண்டு காகக்கூட்டங்கள் கத்தின. தெரு நாய்கள் ஊளையிட்டன. எங்கேயோ பட்டமரப் பொந்திலிருந்து கிளிக்குஞ்சு ஒன்று எதையோ பார்த்துப் பயந்து கீச்சிட்டுக் கத்தியது.

சரசுவுக்கு விழிப்புக் கண்டது. கண்ணுக்குள் என்னவோ உருளுவது போல் கச....முசவென்று இருந்தது. தேகம் முழுவதும் அடித்துப் போட்ட சோர்வு. கிடுகு வாச்சுக்களால் பகல் உள்ளே வந்தது.

"அதுக்குள்ள விடிஞ்சு போச்சா...." அவள் அலுத்துக் கொண்டாள். எப்போதும் அவளுக்கு அப்படித்தான், தூக்கத்திலிருந்து எழுந்து கொள்வதே பெரும் கவலைபோல, நேற்று அம்மன் கோயில் கடைசித் திருவிழா. ஸ்பீக்கரும் சினிமாப்பாட்டும் அந்த அயல் முழுவதும் கலகலத்துப் போயிருந்தது. இரவு வழமைபோல் குட்டித் தம்பியின் சங்கிலியன் கூத்து. திருவிழாவின் உச்சம். இரவு முழுவதும் வெற்றிலையைப் போட்டு அரைத்துக் கொண்டே கொட்டக் கொட்ட விழித்திருந்து பார்த்துவிட்டு சற்று நேரத்திற்கு முன்தான் தனது பாரிவாரங்களுடன் வந்து படுக்கையில் சார்ந்திருந்தாள் சரசு.

குட்டித் தம்பியான் பாட்டு இப்பொழுதும் காற்றினில் கிணு....கிணுத்தது. முகம் கூட முன்னுக்கு வந்து கண்ணுக்குள் நின்றது. சரசுவுக்கு அப்படி ஒரு பிரியம் அவன் பாட்டில்.

அவள் எதையோ நினைத்தாள். எதற்காகவோ சிரித்தாள்.

"ஊரில் உள்ளவர்களெல்லாம் என்னமோ....என்னமோ.... எல்லாந்தான். வாயிலை வச்சுப் பேசுறாங்க. அது என்ன இழவோ.... அப்படி ஒரு பிரியம் எனக்கு....என்ர புருசனில் வச்சிருந்தமாதிரி

பக்கத்திலே குழந்தை முலைக்காம்பைச் சப்பியபடி உறங்கிப்போயிருந்தது. அதன் கடைவாயைத் துடைத்துவிட்டு சட்டையை இழுத்துச் சரிசெய்து கொண்டே எழுந்தாள். குழந்தையின் மூத்திரத்தால் சேலை நனைந்திருந்தது. பிழிந்துவிட்டுக் கொண்டாள். கிழியல் இல்லாத பக்கமாக புரட்டிப் பார்த்து சீராக உடுத்துக் கொண்டாள். "எடி....பொன்னு....எழும்படி....நல்லா நேரம் போட்டுது...." பொன்னுவை எழுப்பினாள். அவள் என்னென்னவோ முணுமுணுத்தாள். பக்கத்தில் கிடந்த சின்னவள் தலையை நிமிர்த்திப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பி சார்ந்து கொண்டாள். நாகராசா, சின்னராணி மூலைக்கு ஒருத்தராய் முறுகிப் போய்க் கிடந்தனர்.

"எடி, எழும்படியென்றால்.... அங்கால பார் எல்லோரும் அவதிப்பட்டு ஓடுகினம். எழும்பு புள்ள...."

"போண....நான் இண்டைக்குப் போகல.... உம்.... உம்...."

"ஏனடி புள்ள.. திங்கட்கிழமையும் அதுவுமா.... பிழைப்புக் கிடைக்கிற நாளில.... சுறுக்கா எழும்பி வெளிக்கிடு...."

"ஒரே அலுப்பா இருக்குதண. இராவுக்கும் ஒண்டும் தரேல்ல. எனக்குச் சாரியாகப் பசிக்குது...."

பொன்னு அழுதுவிடுவாள் போலிருந்தது. சரசுவுக்கு நினைவு இருந்தது. மத்தியானம் பாண் வாங்கிக் கொடுத்தது. அதற்குப் பின் இரவு! இரவு என்ன? முடிச்சில் கூத்துச் செலவுக்கு என்றே பிடித்து வைத்திருந்த ஒரு ரூபாக்குத்தி. அது கடலை வாங்கிக் கொடுத்ததோடு சரி கூத்து ரசிப்பில் எல்லாவற்றையும் தான் மறந்து விட்டாள்.

"என்ர குஞ்செல் ல....நீ போனால்தானடி நான் அடுப்புப்பத்த வைப்பன்.... நான் புள்ளைக்கு விசாலாட்சிக் கிழவி வந்தோடன கிழங்கும் சம்பலும் வாங்கி ஒருத்தருக்கும் குடுக்காம ஒழிச்சு வைப்பன்...."

"....உம் இப்பிடித்தான் நேத்துக் காலம் புறமும் சொன்னனி"

"என்ர வைரவராணை வேண்டி வைப்பன்".

சரசு தலையில் தொட்டு வைத்தாள். பொன்னு மறுபடியும் அம்மாவை நம்பினாள். எழுந்து பாயில் குந்திக்கொண்டாள். சிக்குப் பிடித்த தலையை பற....பற....வென்று சொறிந்தாள். மறுபடியும் கண்களை மூடினாள். மீண்டும் விழித்தாள்.



**“கணபதி பலமுறை விட்டுவிட்டுப் போனவன்தான். தொடர்ந்து இரு இரவுகள் எப்படியோ எங்கேயோ கழித்து விடுவான். அப்புறமாக சமரசம் நடந்து கொள்ளும். இவ்வளவு அமளிக்குள்ளும் சரசு நசுக்கிடாமல் ஐந்தைப் பெற்றுப் போட்டுவிட்டாள்.”**

சரசு குடிசை வாசலுக்கு வந்தாள். சோளகம் பிய்த்து வாங்கியது. முகட்டுக் கிடுகுகள் வரிசைவிட்டு எம்பி....எம்பிக் குதித்தன. அப்படி ஒரு வேகம், இப்படித்தான் ஒரு நாள் சோளகம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தபோது கணபதி இவளைத் திட்டிக் கொண்டே வடக்குப் பக்கமாகப் போனான். காற்றில் இரைச்சலுக்குள் அப்படியே அமுங்கிப் போனதில் இவளுக்கு எதுவும் கேட்கவில்லை.

அவன் அதற்குப்பின் இந்தப் பக்கமே வரவில்லை. கணபதி “வகுப்புத் தொழில்”தான் செய்து வந்தவன். அலுப்பாந்திக்கு வரும் வத்தைகளிலிருந்து மூடைகளை இறக்கி ஏதோ நாலு காசு சம்பாதிக்கச் செய்தான். மாட்டுடன் வண்டில் ஒன்றை வாங்கினான். அதற்குப் பின்தான் ஏனோ நிறையக் குடிக்கத் தொடங்கினான்.

இரவில் வருவான். நிறைவெறியில் மூர்க்கத்தனமாக
சரசுவை அடிப்பான். அவளும் ஏதாவது கையில் கிடைத்தால் எறிந்து தனது இயலாமை, ஆத்திரம் எல்லாவற்றையும் தீர்த்துக் கொள்வாள். பிள்ளைகள் கூக்குரல் வைக்கும். கணபதியை அறிந்த அயலவர்கள் ஏன் வரப்போகிறார்கள்? அடுத்த நாளும்....அதற்கு அடுத்த நாளும்....தாக்குதல்கள், தற்காப்புத் தாக்குதல்கள்....கூக்குரல்கள் தொடரும்.“போடா வேசயடமோனே.... விட்டுவிட்டுப் போடா குடிகார தூமமோன்.... போடா....” இது சரசுவின் வாய்ப்பாடு.

..

இந்த முறை கணபதி திரும்பவில்லை. ஒருநாள், இரண்டு நாள், ஒருவாரம்.... ஒரு மாதம், ஒரு வருஷம்....அவன் திரும்பவேயில்லை. இது சரசுவிற்கு பயமாகத்தான் இருந்தது. அவனுடைய “சாரிரபலவீனத்தை” அறிந்து வைத்திருந்த அவளுக்கு அவனுடைய வைராக்கியம் ஒருவிதத்தில் அதிர்ச்சியாகக் கூட இருந்தது. அவளுக்கும் அப்படித்தான். ஒருநாள்.... இரண்டு நாள், ஒருவாரம்....ஒரு மாதம்.... ஒரு வருஷம்....அப்புறம் கணபதி என்ற “மனிதனை” மறந்தே போய் விட்டாள். அதற்காக துக்கப்படுவதையும் நிறுத்திக் கொண்டாள்.

சில நாட்களுக்கு முன்தான் குட்டித் தம்பியர் கதைவாக்கில் சொல்லி வைத்தார். கணபதி காங்கேசன் துறைக்கு வரும் கப்பல்களிலிருந்து மூடை இறக்குகிறானாம். அங்கேயே குடியும் குடித்தனமும் மறுபடியும் கிப் போய்விட்டதாம்.

காற்று ஒரு கணம் சுழன்றது. பக்கென்று மண்ணைத் துரவி முகத்தில் அடித்தது. சரசு கண்களைத் துடைத்துக் கொண்டாள். தூரத்தில் வயல் வெளி தெரிந்தது. கூத்துக் கொட்டகையை நின்று சிலர் பிரித்துக் கட்டிக் கொண்டிருந்தனர். குட்டித்தம்பியரும் சிலவேளை அங்குதான் நிற்பார்.

குட்டித்தம்பியர் களையானவர், காசு உள்ளவர், வெற்றிலையும் வாயுமாய் எல்லோருடனும் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். ராசகூத்துக்கு குட்டித்தம்பியரை அசைக்கவே முடியாது. பாட்டு அப்படி. வேஷப்பொருத்தம் அப்படி. அவருடைய இளைய பெண்ணுக்கு மூன்று பிள்ளைகள். இப்படி எல்லாம் இருந்து

கொண்டும்தான் சரசுவிடம் வந்து போய்க் கொண்டிருந்தார் குட்டித்தம்பியர்.

பக்கத்துக் குடிசைகளிலும் உரத்த பேச்சுக்குரல். கடற்கரைக்குப் போவதற்கு பலர் யத்தமாகிக் கொண்டிருந்தனர்.

பொன்னு வேலி மூலைக்குள் "ஒண்டுக்கு" குந்திக் கொண்டிருந்தாள். சரசு கூரைக்கு மேல் காயப்போடடிருந்த உமலை எடுத்தாள். ஏற்கனவே கிழிந்து போயிருந்த மூலைகள் இன்னும் பெரிதாகியிருந்தன. ஓலை எடுத்து கிழிவுகளைப் பொத்திப் போடவேண்டும் என்று நேற்று நினைத்திருந்தவள், திருவிழாச் சந்தடியில் மறந்தே போய்விட்டாள்.

உமலை விரித்துப்பார்த்தாள். செதில்களும் செத்த குஞ்சுமீன்களுமாய் வெடில் பக்கென்று மூஞ்சியில் அடித்தது. வயிற்றைக் குமட்டுவது போல்.

பொன்னு இப்போ பானையைத் துளாவிக் கொண்டிருந்தாள். ஏதோ சொட்டு நீர்

கைகளை நனைத்தது. முகத்தில்

தடவிக் கொண்டாள். கண் பீளையையும், எச்சில் காய்ந்திருந்த கடைவாயையும் பாவாடையால் துடைத்துக் கொண்டாள். அந்தப் பாவாடை எப்படியெல்லாமோ கிழிந்து போயிருந்தது. மேல் உடம்பில் அம்மாவின் பெரிய சட்டை தொள தொளவென்றிருந்ததை இறுக்கி, வயிற்றுடன் முடிந்திருந்தாள்.

சரசு அவளுடைய தலையைக் கையால் நீவிவிட்டாள். அழுக்குத்துண்டு ஒன்றினால் மயிரைச் சேர்த்து சிலும்பாமல் கட்டிவிட்டாள்.

"அம்மா எனக்கு....ஒரு சட்ட தைச்சு தாவண.... இதத்தானே நெடுகிலும் போடுறன். கடற்கரைக்கு வாறபொடியன் எல்லாம் எனக்கு நொட்ட சொல்லிகினம்...."

"பொறு புள்ள, சின்னாச்சி அக்காவோட நான் சீட்டு பிடிச்சிருக்கிறன். விழுந்தோடன உனக்கு சீத்தையில ஒருகவுண் தச்சுத்தருவன்...."

பொன்னு உமலைத் தூக்கிக் கொண்டாள். எப்போதாவது இவளோட கூடிப்போற சின்னவியும் எழுந்து வந்துவிட்டான்.

"கவனம் புள்ள....காத்துக்குள்ள....கார் வாறது கூடக்கேக்காது.... சின்னவிய கவனமாக கையில புடிச்சுக் கூட்டிக்கொண்டு போ...."

அவர்கள் போய்விட்டார்கள். இவள் பெருமூச்சு விட்டுக்கொண்டே உள்ளே வந்தாள். குழந்தை அழுது கொண்டிருந்தது.

மூலையில் விளக்கு சரிந்து கிடந்தது. அதை எடுத்து நிமிர்த்தி வைத்தாள். தீப்பெட்டியை உரசிக் கொளுத்தினாள். சடக்கென்று ஒளி நிமிர்ந்தது. அத்துடன் பக்கென்று மறுபடியும் அணைந்தது. இப்போது குழந்தை இன்னும் வீறிட்டது. தேநீராவது வைக்கலாம் என்று நினைத்தவள், புஸ்பராணியைத் தேடினாள், அங்கு ஒருவருமே இல்லை. அந்த விடிகாலையிலேயே.... எங்கேயோ ஓடிவிட்டனர். எங்கே போவார்கள். கடற்கரை குப்பை மேட்டில் எதையாவது பொறுக்கிக் கொண்டிருப்பார்கள்.

அவள் வெளியில் வந்து குரல் கொடுத்தாள்.

"எடி புஸ்பராணி....இங்க வந்து புள்ளையைத் தூக்கி வைச்சிரடி...."

வெகு அண்மையில் ஏதோ பாட்டின் முணுமுணுப்புக் கேட்டது. குட்டித்தம்பியர்தான் வந்து கொண்டிருந்தார்.

சரசு தேநீர் வைப்பதற்காக குசினிக்குள் புகுந்து விட்டாள்.

அவர் வரும் வேளைகளில் அவளுக்கு சந்தோஷந்தான். இருந்தாலும் அடிமனக் கிடக்கையில் ஏதோ துரு....துருவென்று முடக்குவாதம் செய்தது. புரியாத என்னவோ ஒன்று.

"என்ன சரசு தேத்தண்ணி வைக்கிறியா.... எனக்கும் கொஞ்சம் கொண்டா சுடச்சுட."

குட்டித்தம்பியர் வழமையாக உட்காரும் மரப்பெட்டியில் குந்திக் கொண்டார். தலைக்குமேல் பூவரசுநிழல் விழுந்திருந்தது. வெயில் சற்று எட்டித்தான் நின்று கொண்டிருந்தது. இன்னும் அரைமணி நேரத்திற்காவது அதில் இருக்கலாம். அப்புறம் அந்த இடத்தில் இருக்க இயலாது. உள்ளே போக வேண்டும் அல்லது வெளியே போகவேண்டும்.

சரசு தேநீர்க் கோப்பையையும் சர்க்கரைக் குறுகலையும்

> **"என்ன நடந்தது? என்ர புள்ளைக்கு என்ன நடந்தது? சின்னவி அடக்கி வைத்திருந்து வெடித்துச் சிதறியதுபோல் பெரும் குரல் எடுத்து அழுதான்"**

கொண்டு வந்து வைத்தாள். குட்டித்தம்பியர் செழுமையான அவள் உடலை ஒரு தடவை கண்களால் ஸ்பரிசித்தார். அவளும் கவனிக்காமல் என்ன....உதட்டைப் பிதுக்கிக் கொண்டு ஒருக்களித்துப் பார்த்தாள்.

கொடுப்பிற்குள் வைத்திருந்த வெற்றிலைச் சப்பலை தூ.... தூவென்று துப்பிவிட்டு செம்பிலிருந்த நீரினால் நன்றாக கொப்பளித்துக் கொண்டார். இதற்காகவே வந்தவர் போல் தேநீரை ருசித்துக் குடித்தார்.

அவருடைய முகத்தில் இரவு பூசிய பூச்சு இன்னும் அழியவில்லை. மழுங்க விழித்திருந்த முகத்தில் மீசையிருந்த இடத்தில் ஏதோ அழிந்துபோன கறுப்புக் கோட்டின் மெல்லிய தழும்பு. கண்களில் நித்திரையின் கனப்பு. அந்தக் கோலத்தில் அவரைப்பார்க்க சற்று வேடிக்கையாக இருந்தது. இவரா இரவு சங்கிலியனாக வீரத்தோடு பெரிய மீசையைத் திருகிக் கொண்டு வந்தவர்?

"என்ன புள்ள, இரவு கூத்துப் பார்த்தியா.... எப்படி இருந்தது....?"

"என்ன....ஏதோ....காணாத ஆளாட்டம். முன்னுக்குத்தானே இருந்தனான்....பார்த்துப் பார்த்து பல்லைக் காட்டிப்போட்டு...."

குட்டித்தம்பியர் விநயமாய் சிரித்தார். அவரது சின்னத் தொந்தி சற்றுக் குலுங்கியது.

"அது கிடக்கட்டும் புள்ள.... என்ர படிப்பு எப்படி....?"

"பின்கூத்து நீங்க வந்த

பிறகுதான் வலு எழுப்பமாக இருந்தது எண்டு எல்லோரும் பறஞ்சு கொண்டு வந்தினம்...."

குட்டித்தம்பியருக்கு வலு சந்தோஷம். தேநீர் முழுவதையும் ஒரே மூச்சில் உறிஞ்சுவிட்டு கோப்பையை வைத்தார். மடிக்குள் செருகி வைத்துக் கொண்டு வந்த சிறிய "பார்சல்" ஒன்றை அவளிடம் நீட்டிக் கொடுத்தார்.

அவள் பவிசாகச் சிரித்துக் கொண்டே வாங்கி விரித்துப் பார்த்தாள். அது பூ விழுந்த சட்டைத்துண்டு அந்தக் கணத்தில் பொன்னுவைத்தான் நினைத்துக் கொண்டாள் சரசு. இன்னும் அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. அவர் எப்போதாவது இப்படித் தருவது தான். ஆனாலும் அதற்காக ஏங்கி இருந்தவளல்ல....

இருவருமாக என்னவோ எல்லாம் பேசினர். வெளியில் யாரோ வரும் சத்தம் கேட்டது. இருவருமே ஏக காலத்தில் திரும்பிப்

பார்த்தனர். பொன்னு நன்றாக நனைந்துபோய் வந்து கொண்டிருந்தாள். அவள் முகத்திலும் கைகால்களிலும் சேறு அப்பியிருந்தது. அவள் அழுதிருக்க வேண்டும். முகம் வேறு வீங்கியிருந்தது. பக்கத்தில் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு வடக்குத் தெருக்கிழவி மேரி. அவள் தலையில் மீன் விற்கும் கடகமும், சுளகும். பின்னால் சின்னவி. கேவி....கேவி இன்னும் அழுது கொண்டுவந்தான். சரசு ஒருகணம் அப்படியே திகைத்து நின்றாள். அடுத்த கணம் குரல் எடுத்து எட்டு வீட்டுக்கு கேட்க கத்தினாள்.

“என்ன நடந்தது? என்ர புள்ளைக்கு என்ன நடந்தது? சின்னவி அடக்கி வைத்திருந்து வெடித்துச் சிதறியதுபோல் பெரும் குரல் எடுத்து அழுதான்”.

“அக்கா புறக்கி வைத்திருந்த மீனை அந்த ஆனக்கோட்டைப் பொடியன் களவெடுத்துப் போட்டான்.... அக்கா அவன அடிச்சா, அவன் அக்காவை கடலுக்க தள்ளிப் போட்டான்....உம்....உம்...”

மேரிக்கிழவி அப்போது தான் குட்டித்தம்பியர் முற்றத்தில் இருப்பதைக் கவனித்தாள். முகம் சுறுக்கென்று உள் இழுத்துக் கொண்டது. வெறுப்பு டன் விசுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“இந்தா சரசு புள்ளயக் கூட்டிக்கொண்டு முதலில உள்ள போ....எல்லாத்தையும் நான் சொல்லுறன்.”

சரசுவுக்கு விளங்கி விட்டது. பொன்னுவை மெதுவாக அழைத்துக் கொண்டு உள்ளே போனாள். மேரிக் கிழவியும் தொடர்ந்து போனாள். உள்ளே கிழவியின் மெல்லிய குரல் வெகுநேரம் கேட்டது. “இந்தா சரசு நான் சொல்லுறத கவனிச்சிக் கேள். விலைபோகிற குமர் வீட்டுக்கு வந்திருக்கு. இனி எண்டாலும் இந்த அறுதலிமோன அண்டப் பிடிக்காத....”

மேரிக் கிழவி வெளியே வந்தாள். இறக்கி வைத்திருந்த கடகங்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாள். குட்டித்தம்பியர் இருப்பதையே கவனியாதவளாய் விடு... விடுவென நடந்தாள்.

குட்டித்தம்பியார் எதுவும் புரியாதவராய் முற்றத்து மரப்பெட்டியில் இன்னமும்தான் இருந்தார். வெயில் மரப்பெட்டிக்கு அருகே வந்துவிட்டது. இனி அதில் இருக்க இயலாது. கண்கள் வேறு சுழற்றி அடித்தது. ஒரு கண் நித்திரை கொண்டுதான் தீர்க்க வேண்டும். சரசுவைப்பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று நினைத்தார். வெகுநேரம் சரசு வெளியில் வரவே இல்லை. சரசு ஏன் வெளியில் வரவில்லை....?

“சரசு அப்ப நான் போட்டு வாறன்....”

அவர் எழுந்து கொண்டார். தோளில் கிடந்த துண்டினால் முகத்தை அழுத்தித் துடைத்தார். வீட்டை நோக்கி விளங்காத தீவிரத்துடன் நடக்கத் தொடங்கினார்.

சரசு வெளியில் வந்தாள். குட்டித்தம்பியர் கொண்டு வந்த துணிப்பார்சல் விரித்தபடிதான் முற்றத்தில் கிடந்தது.

“குட்டித்தம்பியரும் கிழவி சொன்னதைக் கேட்டிருப்பாரோ....”

அவள் மறுபடியும் கணபதியை நினைத்துக் கொண்டாள். பொன்னு இனி மீன் பொறுக்க வெளியில் போக மாட்டாள். குட்டித்தம்பியரும் இனி வரமாட்டார். அப்படித்தான் அவள் நினைத்தாள். அவ்வாறே நடக்க வேண்டும் என்றும் விரும்பினாள்.

அவள் எல்லோரையும் இழந்துதான் விட்டாள். ஆனாலும் என்ன? எதையும் இழந்துவிடாத நெஞ்சுறுதி. அவளுக்கு அப்படி ஒரு மனப் பயிற்சி எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

*கோட்டுச்*
*சித்திரமாய்*
*போட்டுவைத்தேன்*
*மனதில் உன்னை*
*வந்து வண்ணம் தீட்டுவாய்*
*வானவில்லாயென்று*
*குறுக்கும் நெடுக்குமாய்*
*விழுந்த கோடுகளிலொன்று*
*குறிதவறிப் போனதால்*
*கானலாய்ப் போனதுவோ*
*காலமும்*
*எதிர்பார்ப்புக்களும்...*

“வண்ணா”

தெரிந்து கொள்வோம்.

# பிரஞ்சுக் கல்வித் திட்டம்

லக்ஷ்மன் வித்




**“பெற்றோர்கள் அவரவர் பிள்ளைகளின் படிப்பு பற்றிய தகவல்களை தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டியதோடு அடிப்படை பிரஞ்சு மொழியை கற்றுக் கொள்வதும் அவசியம்.”**

மாணவர்களின் படிப்பில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. பிரான்சில் தமிழர்கள் அவர்களின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

தன் அடுத்த தலைமுறைப் பிள்ளைகளை கல்வியில் முன்னேற்றம் ஈட்டும் வகையில் பெற்றோர்கள் தம் பொருளாதாரத்தை கல்விக்காகச் சேமித்துச் செலவளிக்கிறார்கள். ஆனால் மொழிப் பிரச்சனையும் தாம் புலம்பெயர் நாட்டிற்குப் புதிதாக இருப்பதும் அவர்களுக்கு தங்கள் பிள்ளைகளின் பாடசாலை வாழ்வில் பங்கு பெறுவதற்கு மிகப் பெரிய தடையாக இருக்கிறது. இது புலம்பெயர் தேசங்களில் நிலவுகின்ற பிரச்சனைகளில் ஒன்று தான். இது குழந்தைகளின் கல்வியைச் சிறப்பாக வழி நடாத்த தடையாக இருந்து வருவகிறது.

இதனால் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் படிப்பில் அதி கவனமெடுக்க வேண்டிய கட்டாயப் பயணத்தில் இருக்கிறார்கள்.

பிரஞ்சுக் கல்வித் திட்டத்தை தெரிந்து கொள்ள சில அடிப்படைகளைத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது.
பிரான்சில் ஆரம்ப பள்ளி (Ecole Maternelle), பாலர் வகுப்பு (Ecole Primaire) 6 முதல் 9 ஆம் வகுப்பு (Collège), 10 முதல் 12 ஆம் வகுப்பு (Lycée), பல்கலைக்கழகம் (Etudes Supérieures) என்று கல்வித் திட்டம் வகைப்படுத்தப்படுகிறது.

Maternelle என்பது ஆரம்ப பள்ளியாகவும் CP, CE1, CE2, CM1, CM2 வரையான ஐந்து வகுப்புக்களை Primaire எனவும் 6e, 5e, 4e, (Général or Technologie) 3e, வரையிலான நான்கு வகுப்புக்களை Collège vdTk; 2nde, 1ère, (S L ES) Terminale வரை lycée எனவும் அதன் பின் பல்கலைக்கழமாகவும் நீள்கிறது.

ஒருவர் கல்வியில் வெற்றி பெறுவதற்கு முக்கியமான காரணம் அவர் தனது கல்வித் திட்டத்தை தெரிவு முறையில் தான் தங்கியிருக்கிறது. பிரான்சின் கல்வித் திட்டமானது விஞ்ஞானம் இலக்கணம் மற்றும் பொருளாதாரம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

College இல் மாணவர்கள் Brevet des colleges (இலங்கையில் க.பொ.த.சா.த) என்ற பரீட்ச்சைக்கு தயார் படுத்தப்படுகிறார்கள். அங்கு நான்கு வருடங்களில் அவர்கள் சகல துறை சம்பந்தப்பட்ட அடிப்படைகளைப் படிக்கிறார்கள்.

அதன் பின் lycée இல் அவர்கள் மூன்று வருடங்களில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு விஞ்ஞானம் இலக்கணம் அல்லது பொருளாதாரம் Baccalauréat (இலங்கையில் க பொ த உயர்தரம்) என்ற பரீட்சைக்கு தயாரப் படுத்தப்படுகினார்கள். இந்தப் பட்டம் மேற்கொண்டு பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு மிகவும் அவசியம். இதை விட தொழில் சம்பந்தமான குறுகிய காலப் படிப்புக்களும் உள்ளன.

ஆறு வயதில, (CP,y) பிள்ளைகள் பிரஞ்சு மொழியில் உள்ள அடிப்படைக் கல்வியைக் கற்கிறார்கள். அத்துடன் சக மாணவர்களுடன் உரையாடுவதற்கு கற்கிறார்கள். இந்த வகுப்பின் நோக்கம் அடுத்த வகுப்பேற்றத்தின் போது (அதாவது CP ,y ,Ue,J CE1 f.F) சகல மாணவர்களும் தாங்கள் பொருள் விளங்கி வாசிக்கவில்லை என்றாலும் கூட நன்றாக உச்சரித்து வாசிக்கத் தெரிவது முக்கியமானது.

11 வயதில் college இல் மாணவர்கள் Brevet des collège (இலங்கையில் க பொ த சாஃத) என்ற பரீட்டைக்குத் தயாரப்படுத்துகிறார்கள். அந்த நான்கு வருடங்களில் 5e மிகவும் முக்கியமானது. ஏனெனில் அந்த வகுப்பில் தான் முதன் முதலாக ஒரு தொழில் குறித்து படிப்பதற்கு தெரிவு செய்யலாம். இல்லையேல் பொதுவாகத் திறமையுள்ள மேற்படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்கள் 5e இல் இருந்து 4e பின் 3e க்கு



"5e மிகவும் முக்கியமானது. ஏனெனில் அந்த வகுப்பில் தான் முதன் முதலாக ஒரு தொழில் குறித்து படிப்பதற்கு தெரிவு செய்யலாம்"

இலகுவாக வகுப்பு ஏறலாம். 3e என்ற வகுப்பின் முடிவில் Brevet des collège என்ற பரீட்சைக்கு பின் மாணவர்கள் lycée professionnel (தொழில் நோக்கிய படிப்புக்கள்) அல்லது Lycée Général இல் சகல துறை சம்பந்தப்பட்ட படிப்புக்களையும் படிப்பதற்கு மாணவர்கள் தயார் செய்யப்படுகிறார்கள். ஆனால் Lycée professionnel இல் குறுகிய காலத்தில் விரும்பிய தொழில் துறைக்குள் நுழைவதற்கு தேவையான கல்வியை மட்டும் கற்கலாம்.

பொதுக் கல்வி முறையை (அதாவது lycée général) தெரிவு செய்யும் மாணவர்கள் 3e இல் இருந்து 2d général க்குப் போகிறார்கள். அங்கு அவர்கள் மூன்று வருடங்களின் பின் நடக்கவிருக்கும் baccalauréat பரீட்சைக்கு தயாரப்படுத்தப்படுகிறார்கள். 2d général லின் பின் தான் மாணவர்களின் திறமைகளையும் ஆர்வங்களையும் கருத்திற்கொண்டு 1 ere S, L , அல்லது ES அதாவது 1ere விஞ்ஞானம், இலக்கணம் அல்லது பொருளாதாரம்-சமூகம் என்ற வகுப்புகளுக்கு ஏற்றப்படுகிறார்கள்.

1 ere என்ற வகுப்பில் baccalauréat பரீட்சையின் முதல் கட்டம் பிரஞ்சுப் பாடத்தில் மட்டும் நடைபெறுகிறது. இதில் வரும் மதிப்பெண்களை அடுத்த வருடம் அதாவது Terminale இல் நடக்கவிருக்கும் இறுதிப் பரீட்சையின் மதிப்பெண்களுடன் சேர்த்து கணக்கெடுக்கப்படும். இந்தச் சான்றிதழ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு படிப்பதற்கு மிகவும் அவசியமானதாகும்.

Baccalauréat என்ற பரீட்சையில் மூன்று வகைகள் உள்ளன. அவை BAC S , BAC L மற்றும் BAC ES என்பவையே. 1 ere என்ற வகுப்பிலேயே மாணவர்கள் இந்த முக்கியமான தெரிவைச் செய்யகிறார்கள்.

BAC S எனும் விஞ்ஞானப் பட்டத்துடன் விஞ்ஞானம் மட்டும் அல்லது வேறு துறைகளில் கூட மேற்கொண்டு படிக்கலாம். எனவே இந்தப் பட்டத்துடன் பொருளியல், மருத்துவம், ஆராட்சி, சட்டம், கல்வித்துறை மற்றும் பல்வேறு துறைகளில் மேற்கொண்டு படிக்கலாம். அதை விட இந்தப் பட்டத்துடன் ஆர்வமும் திறமையுமுள்ள மாணவர்கள் Classes Prepatoires என்ற முக்கியமானதொரு படிப்பிற்கு தெரிவு செய்யப்படலாம். அங்கு பிரான்சிலுள்ள பெரிய பொருளியல் பாடசாலைகளுக்குள் (Ecole d'ingénieur) நுழைவதற்கான பரீட்சைகளை எடுப்பதற்கு மாணவர்கள் தயார் செய்யப்படுகிறார்கள்.

BAC L எனும் இலக்கணப் பட்டத்தில் மொழிகள், கல்வித்துறை மற்றும் இலக்கியம் சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிலும் மேற்கொண்டு படிக்கலாம்.

BAC ES என்ற பொருளாதாரம்-சமூகம் என்ற பட்டத்துடன் பொருளாதாரம், வர்த்தகம், சட்டம் சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிலும் மேற்கொண்டு படிக்கலாம். பொதுவாக வழக்கறிஞர்கள் தொழிலதிபர்கள் இத்துறையினுடாக வெளி வருகிறார்கள்.

அடுத்து தொழில் சம்பந்தப்பட்ட கற்கைகளைப் பார்ப்போம். முன்பு குறிப்பிட்டது போன்று 5 eme என்ற வகுப்பின் பின்பே பொது கல்வி வழியில் நெருக்கடிகளைச் சந்திக்கும் மாணவர்கள் 4 eme Technologie என்ற இயந்திரத் தொழில் சம்பந்தப்பட்ட வகுப்புகளுக்குப் போகிறார்கள். திறமையுள்ளவர்கள் இதனூடாக Bac technologie என்ற பட்டத்தைப் பெற்று தொடரலாம்.

ஆனால் பொதுவாக 3e என்ற வகுப்பில் Brevet des collège என்ற பரீட்சையின் பின் தான் பொது கல்வி வழியில் நெருக்கடிகளைச் சந்திக்கும் மாணவர்கள் அல்லது குறுகிய காலத்தில் படிப்பை முடிக்க விரும்பும் மாணவர்கள் தொழில் சம்பந்தமான படிப்புக்களை Lycée professionnel இல் தொடர்வார்கள். அங்கு இரண்டு வருடத்தில் BEP என்ற பரீட்சைக்கு தயாராகிறார்கள். இந்தப் பட்டம் பல்வேறு துறைகளிலும் உள்ளது. இதே பட்டத்துடன் தொழில் துறைக்குள் உடனடியாவே நுழையலாம். ஆனால் பொதுவாக மாணவர்கள் BAC professionnel என்ற சான்றிதழைப் பெறும் வரை தொடர்ந்து படிப்பது வழக்கம்.

ஆனால் ஏதாவதொரு BAC இன் பின் தொடர்ந்து படித்து எடுக்கும் தொழில் சம்பந்தமான சான்றிதழுக்குத் தான் தொழில் உலகில் மதிப்பதிகம்.

அத்தோடு BAC பரீட்சைக்குப் பின்னரான இரண்டு வருடத்தில் BTS மற்றும் DUT என்ற பட்டத்தை பெற மாணவர்கள் முயற்சிக்கலாம். இந்தப் படிப்புக்குத் தெரிவாவதற்கு மாணவர்களின் திறமை கணக்கிடப்படும். இந்தப் பட்டத்துடன் மாணவர்கள் ஒரு சிறு தொழில் வாய்ப்பை நாடலாம் அல்லது தொடர்ந்து பொருளியல் பாடசாலைகளில் படிக்கலாம்.

கல்விச் செல்வத்தை சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதால் சமூகத்தில் நமக்கான இடமும் கௌரவமும் கிடைக்கிறது.
நாட்டில் அரசியல் காரணத்தால் புலம்பெயர்ந்த நம் சமூகம் நம் பெற்றோர்கள் இன்று தன் தன் பொருளாதாரத்தைக் கட்டியமைத்து தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கிறார்கள். அதற்கான முயற்சியில் நாம் தேர்ச்சி பெற வேண்டுமேயாயின் பிள்ளைகளின் கல்வி தொடர்பான தெளிவற்ற நிலை இருப்பின் பெற்றோர்கள் தங்களுக்குள்ளே தயக்கமின்றி கலந்தாலோசிக்க வேண்டும்.

பெற்றோர்கள் அவரவர் பிள்ளைகளின் படிப்பு பற்றிய தகவல்களை தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டியதோடு அடிப்படை பிரஞ்சு மொழியை கற்றுக் கொள்வதும் அவசியம்.

"Franch Educational System (France Diplomatic) வலைத் தளத்திற்கும் அறிவோலை சஞ்சிகை ஊடாக தகவல்களைத் தந்த மயூரன், தர்சன் ஆகிய இளைஞர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்."



# அறிவுக்களஞ்சியம்

யாழினும் இனிது தமிழ்...
பாழ்நிலத்தில்
யாழ்நூலகத்தை தீயிட்டு கொளுத்தியது
அறிவுக்கொலை

அதை அருகில் இருந்து
அரசே வேடிக்கை பார்த்தது
வன்முறையின் உச்சம்
சுயமாக சிந்திக்கத்தூண்டும்
தமிழ் மானுட அறிவை வளர்த்தெடுக்கும்
பாடசாலை மீது எறியப்பட்ட கொள்ளி!

ஆசியாவின் மிகப்பெரிய அறிவுக்களஞ்சியம்
அரியவகை ஓலைச்சுவடிகளை
ஒலி ஒளி நாடாக்களை பாதுகாத்த
தமிழர்களின் கலை இலக்கிய பண்பாட்டுத்தளம்....

ஒரு கட்டிடம் அல்ல
நூலகம்.
பாரம்பரியம்...
பண்பாடு...
அறிவுத்தேடல்..
வாழ்வுமுறை...
தமிழ் தேசிய இனத்தின் அடையாளம்

அவர்கள் தீமூட்டியது புத்தகங்களுக்கல்ல
எங்கள் பிள்ளைகளின்
கல்வி..
அறிவு..
மொழி..
இலக்கியம் மீது

புதிய கட்டிடம் கட்டி
வர்ணம் பூசி மறைத்திருக்கலாம்.
ஆனால்
தீயின் வடு மாறாது

கட்டிடங்களுக்கு கீழே
உயிரோட்டத்துடன்
எப்போதும்
அசைந்துகொண்டுஇருக்கும்

**ஈழபாரதி**(பிரான்ஸ்)

# புகழ் தேடிப்புனையும் பெண்ணியத்தை மறுதலிப்பேன்

ப.பார்தீபன்

*தனது 17வது வயது முதல் சமூகத்தின்பால் கொண்ட நேசத்தால் சமுக முன்நேற்றத்திற்காக தன் படைப்பாமுமையை வித்திட்டுக்கொண்ட எழுத்தாளர்,(எங்கட கதைகள்,விபச்சாரி 80 ரூபாய்,அவரின் படைப்புக்கள்.சமகால தழிழ் இலக்கிய பரப்பில் பேசப்பட்ட சிறுகதைத் தெகுதிகள்), ஊடகவியளாளர்,அரங்க நாடகப் பயிற்றுவிப்பாளர்* **யாழ் தர்மினி பத்மநாதன்**(M.A/m.phil) *அவர்களிடம் சமகால பெண்ணியசார் பேசு பெருள் தெடர்பாக வினாவப்பட்ட கேள்வி.*

*“பெண்கள்மீதான அடக்குமுறை என்பது பல வடிவங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போதும்.பெண்ணியத்திற்காக போறாடுவதாக தங்களை அடயாளம் காட்டும் சில பெண்எழுத்தாளர்கள் சமகாலத்தில் மது அருந்துதல்,தகாத சொல்பேசுதல் தான் பொண்விடுதலை என்ற வரையறையை தோற்றுவிக்க முற்படுகிறார்கள்.இதை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்.பொண்ணியம்த்தின் தேவைப்பாடு எதுவாக இருக்கவேண்டும் என்று நீங்கள் உணர்கின்றீர்கள்?”*

என்னைப் பொறுத்தவரையில் பெண்விடுதலை பெண்ணியம் என நான் நினைப்பது பெண்களின் உரிமைதொடர்பாகத்தான் பெண்களுக்கான தேவைகள் உரிமைகள் எந்தக் காரணத்திற்காகவும் மறுக்கவோ மறுதலிக்கவோ கூடாது பெண் சிந்தனைகள் முயற்சிகள் செயற்பாடுகள் அவள் உயர் இலக்கை அடைபவையாக இருக்கவேண்டும் தங்கி இருப்பவளாகவோ,கையேந்தி நிற்பவளாகவோ அன்றி சுயதேடலும், சுய ஆளுமையும் இருக்கவேண்டும் ஈழ வரலாற்றில் ஒடுக்கப்பட்டபெண்கள் தங்கள் வலுவை ஆயுதப்போராட்டமாக நிருபித்தார்கள் அவர்கள் பொம்மைகளாக கண்காட்சிப்பிண்டங்களா இருக்கவில்லை.ஆனால் இன்று அரசியல் நிலையில் அவர்கள்மீது வன்முறைகள்நிறைந்து செயலற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளானர்.ஆயினும் பெண்கள் பலம்என்பது அளவிடமுடியாதது.இவ்வாறுதான் நான் பொண்ணியம் என்ற பேசு பொருளை நோக்குகிறேன் குறிப்பாக நான் சமூகம் பற்றி உரையாடத் தொடங்கிய காலத்திலிருந்து பொண்ணியம்பேசும்பலரையும் அவர்களின் தனிவாழ்க்கை முறையையும் அவதானித்து வருகின்றேன.இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலம் அதிகமாக துறைசார்ந்து பெண்களுடன் நட்புண்டு.பெண்ணியவாதி என்றால் ஆண்களுக்கெதிரானவள்,ஆண்களை மதிக்கக்கூடாது, ஜீன்ஸ்அணிதல்,நாகரீகமற்ற முறையில் உடை அணிதல்,தலைமுடி சிலிப்பா வெட்டுதல், தங்க நகைகள் அணியக்கூடாது ஆனால் நிறமாலைகள் அணியலாம்,பொட்டுவைக்கக்கூடாது.....இவ்வாறான சில கற்பனைக் கற்பிதங்களோடு செயற்படுபவர் பலரை நான் இன்னமும் சந்தித்துக்கொண்டிருக்கின்றேன்.அதாவது மேலும் மது அருந்துதல் புகைப்பிடித்தல்,கிளப்விடுதிகளில ஆடல்பாடல்களில் ஆண்களுடன் கூட்டுச்சேர்தல், இன்னும் உச்சத்துக்குப்போனால் விபச்சாரத்தில் ஈடுபடுதலையும் பொண்ணியம்என்றும,பெண்விடுதலைஎன்றும் கூறிக்கொள்ளத்தயங்கமாட்டார்கள்

மது,போதை,விபச்சாரம்,என்பனவெல்லாம் அவர்களின் சுதந்திரமா என்று கேட்கலாம்.சுதந்திரம்தான் ஆனால் இயை பெண்ணின் ஆளுமை சார்ந்தோ சுய ஆற்றல் சார்ந்தோ முன்னோக்கிய பாச்சல்சார்ந்தோ உதவப்போவதில்லை.ஆனால் மது அருந்துவதினையும் புகை பிடிப்பதனையும் கௌரவ முறையாவும் உடல் நலத்திற்குகேடாகவும் விமர்சித்த எம் தமிழ் இனிது, புலம்பெயர் நாகரீகங்களுடன் மேதாவித்தனம் கொள்கின்றனர் ஆண்களோ பெண்களோ

குளுநிலையில் மது அருந்துவதும் ஆடுவதும் பாடுவதுவும் என்ற களியாட்டங்களை புதிது புதிதாக அறிமுகம் செய்கின்றனர் இவற்றை எல்லாம் முற்போக்குத்தனமான பெண்ணியம் என்றோ,அல்லது பிற்போக்குத்தனமான விமர்சனம் என்றோ கூறமுடியாது நான் முன்பு குறிப்பிட்டது போன்று பெண்கள் இயங்குகின்ற ஒவ்வொறு சொல் நிலையிலும் அவள் தனக்கான நியாயமான நிரந்தரமாக உரிமைகளுக்காக



**“மது,போதை,விபச்சாரம்,என்பனவெல்லாம் அவர்களின் சுதந்திரமா என்று கேட்கலாம்.சுதந்திரம்தான் ஆனால் இவை பெண்ணின் ஆளுமை சார்ந்தோ சுய ஆற்றல் சார்ந்தோ முன்னோக்கிய பாய்சல்சார்ந்தோ உதவப்போவதில்லை.”**

தேவைகளுக்காகவும் போராடவேண்டுமே தவிர
சிலநிமிட அற்ப ஆசைகளுக்காக பெருமைகளுக்காக விலை போகக்கூடாது. ஈழத்து பெண்களை பொறுத்தவரை வெளிப்படைத்தன்மை மிகக்குறைந்தவர்கள்,தங்கிவாழவும் சேவகம்செய்யவுமே ஆசைப்படுவர். தமிழக பெண்கள் இன்னெரு வகையில் பலமானவர்கள் ஆனால் தங்கள் பலத்தைப்பற்றி உறுதிப்படுத்துவதில் எங்கோ தவறவிடுகின்றனர் வெளிப்படைத்தன்மைநிறைந்த அவர்களால் போராட்டத்தனம்மிக்க அவர்களால் சாதாரண வாழ்வியலில் மென் மேலும் ஒடுக்கப்படுபவர்களாக உள்ளனர்
சில பெண் படைப்பாளிகளின் வாழ்வியல் முறையை பார்க்கும்போது அத்தனை ஆசை வரும் தன் தொழில் சார்ந்த துறைமற்றும் சமுகத்தேவையென அவர்களின் செயல் முனைப்பும் கற்பனாசக்தி நிறைந்த வாழ்வியலுமான அவர்களின் பயணம் சிறப்பானது. அவர்களுக்கு அவர்களது கணவர்மாரே எல்லாமுமாக இருந்து. அவர்களை ஊக்குவிப்பதும் இரட்டையளுமை. இந்தவகை ஒருபுறமிருக்க தம்மை ஆளுமைகளாகவும் ˙ கற்பனை உலகில் சஞ்சரிக்கும் சில பெண்கள் சமூகத்தையும் அவமதித்து தம்மையும் அவமதிப்பதுடன் தம் அவமதிப்பு சார் செயல் நிலையினை பெருமையென நினைத்து மார் தட்டிக்கொள்வதுமுண்டு இவர்களுக்கு துாரதேசத்து விடுதிகளும் சொகுசு வாகனங்களும் இனாமாகவும் கிடைத்து விடுகின்றன இத்தகைய செயற்பாட்டாளரை பெண்ணியவாதிகள் என்று குறிப்பிடமுடியுமா? சாதாரண நெருப்பில் தினமும் புகை குடித்து தன் இரத்தத்தை வியர்வையாகக்கெட்டி நாளும்
பொமுதும் குடும்பத்தையே நெஞ்சில் சுமக்கும் ஒரு தாயை நாம் எந்தவகையளவில் வரம்பிடமுடியும் இங்கு அவள் ஆத்மா தினம் தினம் புழியப்பட்டாலும் நாளும் பொமுதும் அடுப்புடன் போராடும் எண்ணங்கள் சிந்தனைகள் பயணங்கள் எப்படி பிரித்தாழமுடியும்?
அந்த வகையில் பெண்கள் தங்கள் எண்ணங்கள் சிந்தனைக கோளங்களில் முதிர்ச்சியும் செயல்முனைப்பும் கொண்டு தன் உரிமைகளுடன் மன விழிப்புடன் சுயத்துடன் எப்போது இயங்கத் தொடங்குகின்றாளோ அப்போதுதான் இந்த
உலகில் அவள் தான் பெண்ணாக பிறந்தமையினையிட்டு மகிழ்ச்சி கொள்ள முடியும் அவளைதான் பெண்ணியவாதியாக மதிப்பிட முடியும் அதைவிடுத்து மமதைகளுடன் புகழ்தேடிப்புனையும் பெண்ணியத்தை மறுதலிப்பேன்

# குமுதினி




**ஈழபாரதி**

கடல் அலைகள் தாலாட்ட
பனை மரங்கள் தலையாட்ட
உப்புக் காற்றை அள்ளிக்கொண்டு
தமிழகத்து தெருக்களுக்கெல்லாம்
பால் ஊற்றிய
பசும்தீவு.
ஊர் சுற்றி கோயில் கட்டி
வீட்டுக்கொரு வேலி[பகிர்]போட்டு
வெடியரசன் கோட்டை பற்றி
ஊர் முழுக்க செய்தி சொல்லும்
பெரும் தீவு.

தேவிட்டாத தேன் அமுதாய் தமிழ்தூவும்
உலகத் தமிழ் மாநாடும் கண்ட
தனிநாயகம் அடிகள் பற்றியும்
பழங்கால கதை சொல்லும்
இலக்கியங்கள்.
மணலில் தண்ணீர் பிடித்து வரும்
மகளீர் அழகு காண
மணலில் மண்டியிட்டு கிடக்கின்றது
பட்டிப்பூக்கள்..

அலைகளின் வருகையும்
அதன் நீட்சியும் தான்
வாழ்கையானது
அதுவே ஒரு நாள் அழுகையுமானது

என்றும் போல் அன்றும்
அலைகளின் மறுதலிப்பு அறியாமல்
இளம் தளிர்களை அள்ளிக்கொண்டு
கடல் அலையைக் கிளித்துக்கொண்டு
அக்கரை நோக்கி நகர்கிறது

குமுதினி...
நடுக்கடல் சென்றபின்
படகு அமைதியானது
அழுகுரல் அதிகமானது.
ஆண்கள்...
பெண்கள்,,,
குழந்தைகள்,,,இப்படி
வெறி தீரும்வரை வெட்டியே தீர்த்தார்கள்.

நெடுந்தீவின் கடல் சிவப்பானது..
கண்ணீரால் இன்னும் உவர்ப்பானது.
இன்னும் கடல் பயணம்
அச்றுத்தலாகவே இருக்கின்றது
நெடுந்தீவு மக்களுக்கு.

(1985 மே 15 அன்று நெடுந்தீவு குமுதினி படகில் பயணம் செய்த 38 பேர் கொடூரமான முறையில் வெட்டி கொல்லப்பட்டனர்)

# இலங்கைத் தமிழர்களின் தற்போதைய கல்வி மற்றும் கலாசார நிலை



*"பாடசாலைகளுக்குள் இலகுவாக மதுவினையும், போதைப் பொருளினையும் எடுத்துச் செல்கின்றனர். இது தானா எம் சந்ததி எமக்கு சொன்ன வரலாறு???"*

சூ.கிருத்திகன் நடராஜா

உலகளாவிய ரீதியில் கலாசாரத்திற்கும், கல்விக்கும் பெயர் போன இலங்கை தமிழர்கள் இப்பொழுதும் அதே பழைய கலாசாரா மற்றும் கல்வியில் உயர் நிலையில் உள்ளார்களா எனும் கேள்வி கேட்டால் விடை ஆச்சரியக் குறியாகவே உள்ளது. முப்பது வருட போரினை முடிவுக்கு கொண்டு வந்த அரசாங்கத்தால் தற்பொழுது தமிழர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற அத்துமீறல்களை தடுக்க முடியாமல் உள்ளது. ஒரு காலத்தில் எது செய்தாலும் வெளிப்படையாகவே, சிங்களவன் தான் செய்கின்றான் என்று குற்றஞ்சாட்டிய நாங்கள், தற்பொழுது வெட்கித் தலைகுனியும் ஒரு இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். பல்வேறு குற்றச்சாட்டுகளை நாம் சகோதர மொழி பேசும் மக்களிடையே முன்வைத்தாலும், எம்மிடையே உள்ள பிணக்குகளை தீர்க்க வழியில்லாமல் உள்ளோம். பிணக்குகள் என்பதை விட, எம்மிதான அத்துமீறல்களாகவே நான் இதனைப் பார்க்கிறேன். காணி அதிகாரம், பாதுகாப்புத்துறையினரின் அதிகாரங்கள் மற்றும் புத்தரின் புது விகாரைகளின் எழுச்சி என்று நிறையவே பார்த்து பார்த்து சகித்துக் கோல முடியாமல் இருந்த எமக்கிற்கு

மேலும் தலை வலியினைக் கூட்டும் நிகழ்ச்சிகளாக இன்றைய தினங்களில் தமிழ் பிரதேசங்களில் நடைபெற்று வருகிறது.
சிறுமிகள் மீதான பாலியல் துஸ்பிரயோகம், நிச்சயம் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாதவொன்று. இப்படியான துஸ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை நிறைவேற்ற வேண்டும். இருந்தும்
கொலையாளிகள் பிடிப்பட்ட சமயத்தில் கூட, அவர்களிற்கான தண்டனைகள் சரியாகக் கொடுக்கப்படாத சந்தர்பத்தில், வெளியே உள்ளவர்களுக்கும் அது தூண்டுதலாக
அமைகிறது. வித்தியா கொலை, ஹரிஷ்ணவியின் கொலை என்பது இன்னும் மாறாத வடுக்களாகவே இருக்கின்றது. எமக்குத் தெரிந்து இந்த இரண்டு கொலைகள். தெரியாமல் எவ்வளவோ நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. எங்கே சொல்லுங்கள் இதுவெல்லாம் சகோதர மொழி பேசும் நபர்களா செய்கிறார்கள் என்று?? உங்கள் உறவினர்கள், அயலவர்கள் நண்பர்கள் எல்லாமே உங்களுக்குத் தெரிந்தவர்கள் தான். தெரிந்தவர்காளால் இப்படியும் ஆபத்து வருகிறதே அதுவும் தமிழ் சமூகத்தில் தான் வருகிறது என்பது தான் வேதனையான விடயமாகும். சரியான முறையில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு, அத்துமீறுபவர்களுக்கு எதிராக குறுகிய காலத்திற்குள்ளேயே தண்டனைகள் வழங்கப்படும் பட்சத்தில், இவ்வாறன தவறுகள் நிறுத்தப்படாமல் போனாலும், குறைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.



இரண்டாவது விடயம் போதைப்பொருள் பவனை. 2009 சண்டைக்குப் பின்னர் தமிழ் சமூகத்திற்கு புதிதாகப் பரப்பட்ட விடயம். ஆரம்ப காலங்களில் இந்த விடயங்கள் இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் அது மட்டுப்பட்டிருந்தது. ஆனால், யுத்தத்திற்கு அன்றைய ஒரு கேவலமான
அரசினால், பல பிழையான நபர்களின் வழிநடத்தல்களால், எமது இளைஞர்களினை மையப்படுத்தி அவர்களின் விருப்பத்தின் பேரிலோ அல்லது வலிந்தோ திணிக்கப்பட்டுள்ளது. இந்த திணித்தல், எமது இளைஞர்களின் மீண்டுமொரு போராட்ட
தீயினை உருவாக்காமால் அணைக்கும் முகமாகவே திட்டமிட்டு அந்த அரசாங்கம் மேற்கொண்டிருந்தது. உண்மையில் அந்த நாசகார வேலையில் சிவப்பு சால்வை அரசாங்கம் வெற்றியும் கண்டிருந்ததே என்று தான் சொல்லவேண்டும். அந்த அளவிற்கு இளைஞர்கள் போதைப் பொருளினை மொய்க்கத் தொடங்கினர். மாணவர்களின் கல்வி மீதான சிந்தனை இவ்வாறான செயல்களால் தடுத்து அவர்களினை தேவையற்ற வேறு சிந்தனைகளுக்கே இட்டுச்சென்றது. பாடசாலைகளுக்குள் இலகுவாக மதுவினையும், போதைப் பொருளினையும் எடுத்துச் செல்கின்றனர். இது தானா எம் சந்ததி எமக்கு சொன்ன வரலாறு??? எதிர்காலத்தினை தம்பக்கம் கொண்டு செல்ல வேண்டிய இளைஞர்கள் இப்படியான வேளைகளில் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அண்மைய காலங்களில் இடம்பெறும் மிக முக்கிய பிரச்சினையாக இருப்பது வாள்வெட்டு மற்றும் களவுகள். இந்த வாள்வெட்டில் ஈடுபடும் நபர்கள் யார் என்று பார்த்தால், பாடசாலைக் கல்வியினை இடைநிறுத்தி வெட்டிய சுற்றிக் கொண்டு இருப்பவர்கள். போரிற்கு பின்னர் பல இளைஞர்கள் முறையற்ற, தமிழர்களுக்குத் தேவையற்ற இயக்கங்களோடு சேர்ந்து, கப்பம் கேட்டல், பிள்ளைகளைக் கடத்தல் போன்ற இழிவான செயல்களை செய்து வந்தனர். இவ்வாறன இயக்கங்களினை வளர்த்து விட்ட பெருமையும் அன்றைய சிவப்பு சால்வை அரசாங்கத்தினையே சாரும் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும். இவ்வாறனவர்கள் தான் படிக்கும் சிறார்களையும் தமது குழுக்களில் இணைத்து, மக்களை வெருட்டி வருகின்றனர். அண்மைய நாட்களில் யாழ்ப்பாணத்தில் ஒரு குழு பிடிபட்டதாக பத்திரிகையில் வாசிக்கக் கிடைத்தது. இவர்களிற்கு பணம் அனுப்பும் நபர்களாக புலம்பெயர் இலங்கைத் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று காவல்துறையில் பிடிபட்ட நபர்கள் வாக்குமூலம் கொடுத்திருப்பது தான் இன்னும் வேதனையான விடயம்.
எவ்வளவோ சிறுவர் இல்லங்கள், போரினால் பாதிக்கப்பட்டு இன்னும் மீளாமல் இருக்கும் எத்தனையோ மக்கள் இருக்கின்றார்கள். அவர்களிருக்கு புலம்பெயர் இலங்கைத் தமிழ் மக்கள் பண உதவிகளையோ அல்லது வேறு விதமான உதவிகளையோ அளித்தால் திருப்தி. அப்படி உதவி செய்யும் நிறைய உறவுகளை நானே நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால் சிலர் பிழையானவர்களுக்கு செய்யும் விடயங்கள் ஒட்டு மொத்த உதவி செய்யும் நபர்களுக்கும் பிழையான பெயரினையே எடுத்துக் கொடுக்கிறது.
இவ்வாறன செயல்களால் வரலாற்றிலிருந்து அழிக்கப்பட்ட
உறவுகள் இருந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்ற ஏகோபித்த குரல் தான் எம்மிடையே எழுகின்றது. போராட்டம் வெடித்த வரலாறு பலருக்குத் தெரியாத போதும், அதனை பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு சரியான
முறையில் சொல்வதுமில்லை. எனக்குத் தெரிந்து எங்கள்
தலைமுறையோடு இந்த வடுக்களினை நிச்சயம் மறந்து விடுவார்கள் அல்லது மறைத்து விடுவார்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் அவர்கள் இருந்திருந்தால் தான் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்லப் போகிறோமோ தெரியவில்லை. முடிந்ததனை மாறும் அளவிற்கு எம்மத்தியில் டைம் மெசின் இல்லை. ஆகவே நாமே நமக்கென்றுஒரு வரைமுறைகளை போட்டு வாழ வேண்டும்.
எம்மக்கள், எம்முறவுகள் அவர்களிற்கு நாம் தான் முன்னேற்றகரமான உதவிகளை வழங்க வேண்டும். மேலும் பிழையான வழிகாட்டல்களிருந்து விடுபட்டு, சரியான நபர்களோடு சேர்ந்து எம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை
சிறிதளவாவது முன்னேற்ற வேண்டும். இது தான் பலரது ஆசை. பார்ப்போம் எதிர் காலத்திலாவது மாற்றம் நிகழுமா என்று !!!!!

# நாவலர் குறும்பட விருதுகள்

தொகுப்பு
**வண்ணா**




பிரான்சில் தமிழர்களின் கலை,கலாசாரம்,பண்பாடு என்பன விட்டுப் போகாமலும்,தாயகத்தில் நலிவுற்ற மக்களின் வாழ்வை கட்டியெழுப்பும் நோக்கில் பல்வேறு வேலைத்
திட்டங்கள்,பொருளாதார,வாழ்வாதார உதவிகள் புரிந்தும் வரும் புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் ஆண்டுதோறும் பிரான்ஸ் மண்ணில் நடாத்திவரும் நாவலர் குறும்பட விருதுகள் வழங்கும் விழாவின் 7வது விருது வழங்கும் விழா கடந்த 08.05.2016 அன்று பரீசில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக எழுத்தாளர் குணா கவியழகன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.
தமிழறிவு நிகழ்ச்சிகள், திருக்குறள், கட்டுரைப் போட்டிகள்,இசை,நடனம்,நாடகம் என்பன இடம்பெற்று கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும், நினைவுப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

நாவலர் குறும்பட விழாவிற்காக உலகெங்கும் இருந்து பல குறும்படங்கள் பங்கேற்றபோதிலும், முதல் மூன்று இடங்களை
முறையே bilboque நானாக நான், pray for
ஆகியவையும் யூரர் விருதை click ம் பெற்றுச் சென்றன.
நானாகநான், பந்து,
இவண் ராவண், கரை தேடிபூக்களை பறிக்காதீர் pray forinsideme, click yourdestination,
bilboque ஆகியவை சிறந்த பத்து குறும்படங்களாக தெரிவுசெய்யப்பட்டதுடன் கலைஞர்களுக்கு விருதுகளும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.








சிறந்த நடிகர்
சதா பிரணவன்




குழந்தை
நட்சத்திரம்
யதுசன்




சிறந்த நடிகை
காயத்திரி




சிறந்த இயக்குனர்
ஜெ.சதீஸ்




சிறந்த
இசையமைப்பாளர்
பிரியதர்சன்

ஏழாவது நாவலர் குறும்பட விருதுகள் வழங்கும் விழாவில்,

சிறந்த நடிகர் – சதாபிரணவன்[ராவணனண்]
சிறந்த நடிகை –காயத்திரி [நானாக நான்]
சிறந்த துணை நடிகர் – கேசவன் [பூக்களை பறிக்காதீர்]
சிறந்த துணைநடிகை – மீரா [கரை தேடி]
சிறந்த குழந்தை நட்சத்திரம் – யதுசன் [பந்து]
சிறந்த கதைத்தெரிவு –ஜேூ ஜனா [pray for ]
சிறந்த கலையமைப்பு – அர்ஜந்த் [pray for]
சிறந்த ஒலியமைப்பு – பிரதாப் (bilboque ]
சிறந்த இசையமைப்பாளர் –பிரியதர்சன் [bilboque]
சிறந்த படத்தொகுப்பு – டெசுபன் [your destination]
சிறந்த ஒளியமைப்பு – சொக்கா விஜிதன் [இவன்ராவணனண்]
சிறந்த திரைக்கதை – சுரேந்திரன் [bilboque)
சிறந்த இயக்குனர் – சதீஸ் [your destination]

*ஆகியோர் விருதுகளை பெற்றுக்கொண்டனர்.*

விழாவில் கலந்து சிறப்பித்த எழுத்தாளர் குணா கவியழகன் ஈழத்தவர்களின் படைப்புகள் பற்றி குறிப்பிடுகையில் சினிமாவானது வர்த்தக சினிமா, மாற்றத்திற்கான சினிமா, கலைக்கான சினிமா என மூன்றுவகைப்படுத்தலாம். எம்மிலிருந்து இன்று பலர் சினிமா நோக்கி நகர்கின்றனர் இதுவோர் ஆரோக்கியமான விடயம், ஆயினும் எமது ஈழத்து, புலம்பெயர் தமிழ்சினிமாவானது அதன் சொந்த மொழியிலேயே பயணிக்க வேண்டும். நாம் எமது படைப்புகளுக்கான உருவாக்கத்தை வேறெங்கும் தேடாது எமக்குள்ளேயே தேடிப்பெற்று தரமான படைப்புகளை வெளிக்கொண்டுவரவேண்டும். வெறுமனேவிருதுகளுக்காக மட்டும் சினிமா எடுக்காது மானசீகமான சினிமாவை வழங்குவதையே நோக்காக கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் செயற்றிறன் மிக்க செயற்பாடுகள் மென்மேலும் எதிர்காலங்களிலும் விரிவாக்கம் பெற்று ஈழத்தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்குமென்று நம்புகிறோம்.

# குறும் படம்
# ஓர் பார்வை




ராணி கிரியேஷன்ஸ் தயாரிப்பில் மன்மதன் பாஸ்கியின் இயக்கத்தில் உருவாகிய படமிது. இன்றைய நாட்களில் பேஷ்புக் போன்ற சமூக வலைத்தளங்களால் ஏற்படும் கூட்டு தனிமனித பாதிப்புக்கள் பற்றி கூற முற்படுகிறார். கதையின் நாயகி ஈழத்தில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தால் தடுப்பு முகாமில் இருந்தவர். நாயகன் அவரைப்பற்றிய எல்லாம் அறிந்த பின்னர் அவரை திருமணம் முடித்து பரீசில் வாழ்ந்து வருகின்றனர். பேஷ்புக்கில் தடுப்பு முகாமில் இருந்த பெண்களின் படங்கள் ஒருவரால் பதிவிடப்பட்டிருந்ததை பார்த்த நாயகி, தன்னுடைய படங்களும் இவ்வாறாக பிரசுரிக்கப்படலாமென அஞ்சுகிறார். நிறைமாதக் கர்ப்பிணியான தனது மனைவியின் நிலைகண்டு நாயகனும் மனக்கிலேசமடைகிறார் இதனால் அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி குலைகிறது. நாயகன் தனக்குத்தெரிந்த ஒருவர் மூலம் பேஷ்புக்கில் இவ்வாறான படங்களை வெளியிடும் நபரை தேடிக்கண்டுபிடிக்க முயல்கிறார், இறுதியில் அவர் மூலம் ஒர் நெற்கஃபேயில் இருந்து அந்த நபர் பேஷ்புக் திறந்து பார்த்துக்கொண்டிருப்பதை கண்டுபிடித்து அந்த நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார். அந்நபர் ஊரிலிருக்கும் ஒரு சிலர் தனக்கு இவற்றை வெளியிட அனுப்பிவைப்பதாகவும் தான் அவைகளை பிரசுரிப்பதால் அவர்கள் பணம் கொடுப்பதாகவும் கூறுகிறார். இப்படியாக படங்களைப் போட்டு பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை சீரழிக்க வேண்டாமென கேட்கையில் அந்நபர் தான் தொடர்ந்தும் படங்களை பதிவிடுவேன் உங்களால் முடிந்ததை செய்யுங்களென கூறுகிறார். இதனை கேட்கும் நாயகி அவர்முன் தான் வாழ்ந்து காட்டுவேனென சவால் விட்டுச் செல்கிறார். படத்தின் ஒவ்வோர் காட்சிகளிம் உணர்வுப்பூர்வமாக எடுக்கப்பட்டுள்ளது, நாயகி இரவில் தூக்கத்திலிருந்து எழுத்து அழுவதும்அவருடன் தடுப்புமுகாமில் இருந்த பெண் ஊடகம் ஒன்றிற்கு கொடுத்த போட்டியை திரும்பத்திரும்ப போட்டுப் பார்ப்பதும்,.தான் தற்கொலை செய்தால் நீங்கள் என்ன செய்வீர்களென்று நாயகனைப்பார்த்து கேட்பது, நாயகன் பதில் கூறாது வெறித்துப்பார்ப்பது. இவ்வாறான படங்கள் மூலமாகவேனும் தன் இனத்திற்கு நடந்த கொடுமைகளுக்கு நீதி கிடைக்குமென நாயகன் நப்பாசை கொண்டு நாயகிக்கு

பதில் கூறுவது,நாயகன் வேலை செய்யுமிடத்தில் ஒருவர் போனில் பெண்களின் படங்கள் வேண்டி பேசுவதும் அதைப்பார்க்கும் நாயகனின் மனோநிலை அவரின் இயலாத்தன்மை வெளிப்படுதல்,மெற்றோவில் சந்திக்கும் நபரின் விரக்தியான பேச்சு,இறுதியில் பேஷ்புக்கில் படங்கள் பதிவிட்ட நபருடன் முரண்படுகையில் பாதிக்கப்பட்டவர்களின் இயலாத்தனம்,ஒன்றுமே இல்லையென்றானபின் ,அதிலிருந்து வரும் வைராக்கியம் இவ்வாறாக காட்சிப்படுத்தல்கள் நன்றாக உள்ளது.படத்தொகுப்பு,ஒளிப்பதிவு குறைபடக்கூடியதாக எதுவுமில்லை,முக்கியமான கதைப்பொருளை குறும்படம் மூலம் காட்சிப்படுத்த முயன்ற இயக்குனர் படத்தின் நீளத்தை சற்று கவனிக்கத் தவறிவிட்டார்.




பிறவுண் மீடியா அகீபன் இயக்கிய குறும்படம்.சாதாரணமாக குடும்பங்களில் நடைபெறும் கணவன் மனைவிக்கிடையேயான முரண்பாடுகள் எப்படி குழந்தைகளை பாதிக்கின்றதென ஓர் ஓவியம் வரையும் காட்சியினூடாக மிக அழகாக வெளிப்படுத்தியுள்ளார் இயக்குனர்.ஒரு ஓவியத்தை சரி சமமாய் கீறத்தொடங்கும் கணவனும் மனைவியும் ஓவியம் கீறி முடியும் வரை ஒருவரையொருவர் புரிந்து கொண்டவர்களாக மிக சந்தோச மனோநிலையில் விட்டுக்கொடுப்பவர்களாக காணப்படுகின்றனர்.

ஓவியம் வரைந்து முடிந்து அதற்கு வண்ணம் தீட்டும்போது அவர்களிடையே வேறுபாடு ஆரம்பிக்கிறது,கணவன் ஒரு நிறத்தில் ஒரு மாதிரி வண்ணம் தீட்ட,மனைவி வேறோர் நிறத்தில் வேறோர் வடிவில் வண்ணம் கொடுக்க இறுதியில் அந்த ஓவியம் இருவேறு வடிவங்கள் நிறங்களால் பிரிக்கப்பட்டு காணப்படுகிறது.இருவரும் ஆத்திரமடைந்து வண்ணக்கலவையை அந்த ஓவியம் மேல் விசுகின்றனர்,வீசிவிட்டுப் பின்னால் பார்க்கையில் அவர்களின் பெண் குழந்தையின் முகத்தில் அவர்கள் வீசியெறிந்த வண்ணம் பூசப்பட்டு இருக்கிறது.

கணவன் மனைவி,அவர்களின் பெண் குழந்தை மூவரும் அவர்களின் முகபாவங்களால் உணர்ச்சிகளை வெளிப்படுத்திய விதம் மிக சிறப்பானது.மகிழ்வாய் இருக்கம்போது ஓவியம் வரைகையிலும்,வண்ணம் பூசுகையில் திடீரென மாறும் அவர்களின் மனோபாவம் ஓவியத்திற்கும் மனதின் எண்ணங்களுக்குமான உளவியலை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.அவ்வாறே இறுதியில் குழந்தை இவர்கள் இருவரையும் பார்க்கும் பார்வை என்னை நானாகவே இருக்க விடுங்கள் என்பதாகவே சொல்கிறது.

காட்சி,அவர்களின் மனோநிலைக்கேற்ப மாறுபடும் பின்னணி இசை சம்பவங்களை தனித்தனியே பிரியவிடாது ஒன்றாகவே பயணிக்க வைக்கிறது.இசை ஓவியம்,மனம் ஆகிய முன்றும் மனிதனிலிருந்து பிரிக்க முடியா தொடர்பை கொண்டவை.

# புலம்பெயர் நாடும் வளரும் இளம் தலைமுறையினரும்



### "நான் ஏன் தாய்மொழியாம் தமிழைத் கற்க வேண்டும்?"
### "ஏன் எமது தமிழர் கலைகலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும்?"

**மதிவதனி**

புலம்பெயர் நாடு என்பது தமிழர்களின் தாய்வீடல்ல அவர்களது ஏக்கங்களின் தற்காலிக இருப்பிடம். தமது தாயகத்தின் தனித்துவத்தை போர் ,பொருளாதாரம், சூல்நிலை போன்ற காரணங்களுக்காக விருப்பமின்றி கட்டாயத்தின் பேரில் தொலைந்துவிட்டு புலம்பெயர் நாடுகளில் கால்பதித்து தினமும் இழுந்ததை ஏக்கத்துடன் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

"எத்தனையோ கோடி இன்பங்களை எம் தாயகத்தில் வைத்தாய்.......ஆனால் என் மண்ணின் சுவாசத்தை மட்டும் என்னால் நுகர முடியாதவனாக்கி விட்டாய்" என அங்கலாய்க்கும் புலம்பெயர் தமிழ் சமுதாயத்தின் மூச்சு வெப்பத்தில் புதிய தலைமுறையினர் புலம்பெயர் நாட்டில் கால்பதிக்கின்றனர்.

புலம்பெயர் பெற்றோர்களுக்கு குழந்தைகளாக வலம்வரும் இந்த இளம் தமிழ் தலைமுறையினர் இரட்டைக் கலாச்சாரத்தினுள் அகப்பட்டு துன்பப்படும் தன்மையினை கண் இருந்தும் குருடர்களாக பார்க்க சிலசமயங்களில் தவறிவிடுகின்றோம், ஏனெனில் புலம்பெயர் பெற்றோரின் தாயக மொழி, பண்பாட்டு கலை, கலாச்சார உணர்வுகள், ஏக்கங்ககள் ஆகியவற்றை தமது குழந்தைகளுக்கு எப்படி உணர்விப்பது என்று விழி பிதுங்கும் பெரும்பாலான பெற்றோர் அதனை ஒரு திணிப்பாக பிள்ளைகளிடையே புகுத்துகின்றனர் எனலாம்.

நமது அடையாளம் தாய்மொழிதான் என்பதை புலம்பெயர் பெற்றோரால் இலகுவாக உள்வாங்கமுடியும் ஏனெனில் அது அவர்களது சுவாசம்! ஆனால் இந்த புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளர்ந்து வரும் தமிழ் தலைமுறையினருக்கு தமது பெற்றோரின் தமிழ் மொழி மட்டுமே சுவாசம். அவர்களால் தமிழ் மொழியை தாய்மொழியாக உள்வாங்குவது என்பது சவாலுக்குரிய விடயமாக உள்ளது. காரணம் தமது பெற்றோரைத் தவிர்த்து தமது கண்முன்னே அன்றாடம் காண்கின்ற கேட்கின்ற பழகுகின்ற அனைத்துமே தாம் பிறந்து வளர்கின்ற நாட்டின் மொழி பண்பாட்டின் கலைகலாச்சாரமே.

குறிப்பிட்ட வயது வரை பெற்றோரின் வாய்மொழியைக் கேட்டு "அம்மா" என்று இனிய தாய்த்தமிழால் அழைக்கும் குழந்தை தனது மழலைப்பருவத்தின் நான்காவது வயதிலேயே... தனது வாழ்வியல் நாட்டுக்கான மொழியை கற்க பேச வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றது.இதனால் சிறு மழலைப்பருவத்தின் இயல்பு நிலையில் தனது தாய்மொழியை பேசமுடியாத அவலநிலையில் அகப்படும் குழந்தைகள் "பயிற்சிகொடுத்து வளர்க்கப்படும் குழந்தைகளாக மாற்றப்படுகின்றனர்." இதனால் இந்தச் சிறுவயதிலேயே உளவியல் ரீதியான திணிப்பை கட்டாயத்தில் உள்வாங்கும் புலம்பெயர் குழந்தைகள் தமது நிஜமான ஆசைகள் நிறைவேற இன்றுவரை மறைமுகமாக தேடிக்கொண்டுதான் இருக்கின்றனர். குறிப்பிட்டவயதுவரையில்இதற்கானவிடையத்தை தேடமறுக்கும் இவர்கள் இளம்பருவ வயதினை எட்டுகையில் பெற்றோரை நோக்கி கேள்விக்கணைகளைத் தொடுத்து நிற்கின்றனர்.

1.நான் ஏன் தாய்மொழியாம் தமிழைத் கற்க வேண்டும்?
2.ஏன் எமது தமிழர் கலைகலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும்?
என்ற அதிமுக்கிய கேள்விகளைக் கேட்டு தகுந்த விளக்கத்தை எதிர்பார்த்து நிற்கையில்!

புலம்பெயர் பெற்றோர்களின் பங்கு இந்த இடத்தில் சவாலாக மாறிவிடுகிறது ஏனெனில் பிள்ளைகள் தெளிந்த சிந்தையின் இருப்பிடகாரர்கள் .ஆனால் தமது சிந்தையினை வெளிப்படுத்துவதில் மட்டும் பிள்ளைகளாக இருக்கின்றனர்.இதற்கான காரணம் அவர்களுக்கு கிடைக்கும் அனுபவ அறிவுக்கான வயது குறைவாக இருப்பதே காரணம்.இதனை மறக்கும் பெற்றோர் இளம் தலைமுறையினரின்தேடலுக்குசரியானவிளக்கத்தைஆசிரியராக மாறி இயன்றளவு தெளிவுபடுத்துவதற்கு தவறிவிடுகின்றனர். இதனை எல்லாப் பெற்றோராலும் செயல்படுத்த முடியாத நிலப்பாட்டினையும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இக்காரணத்தால் தமது அடையாளத்தை அதாவது தாய்மொழியாம் தமிழை தமது குழந்தைகளுக்கு சிறுவயது முதல் இலகு நடையில் இரட்டைக்கலாச்சார வாழ்வியலுக்கு ஏற்ப தெளிவுபடுத்துவதற்கு அதற்கே உரிய முறையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களை நாடிச்சென்று அவர்களின் தேடலுக்கான விளக்கத்தை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

இந்த நிலைப்பாட்டில் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் குழந்தைகளுக்கு தமிழ்மொழியை கற்பிப்பது என்பது இலகுவானதொரு செயல்பாடல்ல என்பதே ஒவ்வொரு தமிழாசிரியரும் வெளிப்படுத்தும் கருத்தாகும்.அதற்கான காரணமாக அவர்கள் குறிப்பிடுவது என்வென்றால் "தாயகத்தில் வளரும் தமிழ் குழந்தைகளுக்கு தமிழ்மொழி முதல்தரமான தாய்மொழி.மாறாக புலம்பெயர் நாடுகளில் வளரும் குழந்தைகளுக்கு தாய் மொழி இரண்டாம் தர மொழியாகவே உள்வாங்கப்படுகிறது." இதனால் இரண்டாம் தர மொழியாக உள்வாங்கி வளருகின்றன இளம்தலைமுறையினருக்கான தாய்மொழிக்கல்வியானது "கல்லில் நார் உரிப்பது போலவே அமைகிறது.இது அவர்களது தப்புமல்ல தப்பிவந்த பெற்றோரின் தப்புமல்ல.வாழ்க்கைச்சூழலே காரணம்.இதற்காக புலம்பெயர் தமிழ் ஆசிரியர்கள் மாறிவரும் மொழிச்சூழலுக்கு ஏற்ப நமது தாய்மொழி ரீதியாகவும், வாழ்வியல் சூழலுக்குரிய இரண்டாம் தர மொழி ரீதியாகவும் வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தாய்மொழிக்கல்வியை குழந்தைகளுக்கு கற்பிக்கையில் அந்த குழந்தைகள் தான் பேசும் அல்லது கற்றுக்கொண்டிருக்கும் மொழிக்குரிய அனைத்து தகுதிகளும் தனது தாய்மொழியாம் தமிழிலும் உண்டென அவர்கள் உள்வாங்குவதுடன் அதுவொரு செம்மொழி என்பதையும் உணரும் வகையில் கற்பிக்க வேண்டும்.

இதனால் எல்லாச்சிறப்புமுடைய தாய்மொழியை பேசுவதற்கோ கற்பதற்கோ தமக்கு எந்த ரீதியிலும் இடையூறோ வெட்கமோ இல்லையென அவர்கள் உளவியல் ரீதியாக உணர்ந்தார்கள் எனில் குழந்தைகளுக்கு தமிழ் மீது ஆர்வம் ஏற்படும் தமிழ்மொழியும் வளர்ச்சி பெற்று புலம் பெயர் நாடுகளில் வீறுநடைபோடத்தொடங்கிவிடும்.

இங்கு ஆசிரியர்கள் தனியே பாடம் மட்டுமே சொல்லிக் கொடுப்பவர்களாக அல்லாமல் அவர்களின் பெற்றோர்களாக நண்பர்களாக மாறுவதுடன் மாணவர்களில் ஒருவராகவும் தம்மை காட்ட வேண்டியது சிறப்பாகும்.

புலம்பெயர் வாழ்வியல் பாடசாலைகளில் இத்தகைய தமிழ் கற்றல் முறையை உள்வாங்குகின்ற மாணவர்கள் தமது தமிழ் ஆசிரியர்களிடமும் இத்தகைய கற்பித்தல் முறையை எதிர்பார்க்கின்றனர்.

ஆர்வத்துடன் தமது தாய்மொழியை கற்கச் செல்லும் குழந்தைகளுக்கு முதலில் எழுத்தறிவும் மொழியறிவும் புகட்டுவதுடன் தமது கலைகலாச்சாரம் மற்றும் பண்பாட்டு முறைகளை அவர்களது இரட்டை கலாச்சாரத்துக்கு ஏற்ப உணர்விப்பது ஆசிரியர்கள் கடமை மட்டுமல்ல பெற்றோரின் கடமையும் கூட.

ஆசிரியர்கள் தமிழை வாழ்வியல் சூழலுக்குரிய பதிவுகளை பயில்வித்தால்குழந்தைகள் மனதில் தமிழ் நீங்க இடம்பெறும் இதனை மனதில் கொண்டு வளருகின்றன தமிழ் சமூகத்தை தகுந்த முறையில் வளப்படுத்துவோம் வழிப்படுத்துவோம்.

# தலித்தியமும் ஈழ அரசியலும்



வேலன்

ஈழப் போராட்டம் என்பது சாதியை முழுமையாக அழித்துவிட்டதா என்றால் இல்லை என்பதே ஒற்றைப் பதிலாகும். ஆனால் சாதிய முரண்பாடுதான் பிரதான முரண்பாடாக இருக்கின்றதா? இல்லையா என்ற முடிவிற்க வருவதற்கு சமூக ஆய்வு என்பது முக்கியமானதாகும்.

சாதியப் போராட்டத்தில் சொந்தக் கோட்பாடு படைக்கப்படவில்லையா? ஈழத்தின் சாதிய எதிர்ப்புப் போராட்ட முறை எதனையும் சாதித்துவிடவில்லையா? சாதியப் பிரச்சனைய்ப் பிரச்சனையை தீர்ப்பதற்கான ஈழத்தில் சூழலில் பயன்படுத்தக் கூடிய சொந்த க் கோட்பாட்டை வந்தடைதல் என்பது கடந்து வந்த பாதையில் இருந்து உருவாக்கப்படுவதாகும்.

மேற்கண்ட விடயங்களை சமூக அக்கறை கொண்டவர்கள் சிந்தித்து செயற்பாட்டுத் தளத்திற்கு கொண்டு முயற்சிப்பது இல்லை.

**Nanthiny Xavier** தோழரை பேட்டியெடுத்த போது இற்றைக்கு 16 வருடங்களுக்குமுன் .....அப்போது "தலித் " இதழ் ஆசிரியர். இப்போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின்
செயலாளர், "மணற்கேணி" சஞ்சிகையின் ஆசிரியர் ..திரு .ரவிக்குமார் "தலித்" இதழுக்காக
பாண்டிச்சேரியில் வைத்து என்னிடம் எடுத்த நேர்காணலில் ஒரு கேள்வியும் எனது பதிலும்.
ரவிக்குமார்: - அதே கால கட்டத்தில்தான் இந்தியாவில் நக்ஸல்பாரிப்போராட்டம் நடந்தது. ஆனால் அது சாதிப் பிரச்சனையைக் கையில் எடுக்கவில்லை. மாவோயிசத்தை உயர்த்திபிடித்த நீங்களோ சாதிப்பிரச்சனையை எடுதிருக்கிறீர்கள். இதற்கு

**"அண்ணல் அம்பேத்தகார், தந்தை பெரியார் போன்றவர்கள் சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடியவர்கள். இவர்களிடத்தில் நிலப்பிரபுத்துவத்தில் உள்ள கூறுகளை தீர்க்கமாக எதிர்த்தார்கள். இதில் அவர்கள் சமரசம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்"**

ஏற்கனவே உள்ள கோட்பாடுகளையும், தனிமனித சிந்தனைப் புரிதல், விருப்பு என்பவற்றை திணிக்கும் நிலைகளுக்கு அப்பால் இவர்களின் அரசியல், கருத்துருவாக்கப் போக்கு என்பது இல்லை. இவர்களிடம் தலித், அம்பேத்கார், பெரியார் என்ற சொற்சிலம்பத்திற்குப் அப்பால் இயங்கியல் பொருள்முதலாதச் சிந்தனை என்பது இல்லை. தமது அகவிருப்பின் நிலைப்பாட்டை எப்படியாது திணித்துவிடும் சிந்தனைப் போக்கும், முயற்சியும் தான் மேலோங்கியுள்ளது. சமூகத்தின் போக்கை கணிப்பது, அதன் நிமிர்த்தம் காரியமாற்றுவது அவசியம்.

சாதியம் உற்பத்தியில் தீர்க்கமாக இருப்பது
சிந்தனைத் தளத்தில் தீர்க்கமாக இருப்பது
இவைகள் இரண்டும் வெவ்வேறான விடயங்களாகும்.
உற்பத்தியில் தீர்க்கமாக இருப்பது அடிமைத் தனமாக இருக்கும் சிந்தனை வடிவம் என்பது அன்றாட வாழ்வில் மற்றவர்களை கீழ்மையாக நடத்துதல், சிந்தனை வெளிப்படுத்தி மற்றவர்களை நிந்திப்பதாகும்.

சிந்தனைவடிவத்தையும் அதன் வேரையும் சமூகக் கட்டமைப்பு தொடர்ச்சியாக அனுமதித்துக் கொண்டிருக்கும் அனைத்துவித பழைய உற்பத்தி முறைக்கேற்ற சிந்தனை முறை என்பது தொடர்ச்சியாக பாதுகாக்கப்படுகின்றது. இவற்றையும் இணைத்து அனைத்தும் தழுவிய முறையில் ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தலித்திய அரசியலை எதிர்ப்பவர்கள் ?
தலித்திய கோட்பாட்டை எதிர்ப்பது என்பது மேட்டுக்குடி அல்லது சாதிய வெறியை வெளிப்படுத்துபவர்களின் ஆதிக்க வடிமா? அவ்வாறு பார்ப்பது சரியா என்ற பிரச்சனைகளை ஆய்வை மறுக்கும் சோம்பேறித்தனமான கருத்துக்களில் இருந்து தன் உணர்வை மிகைப்படுத்திய கருத்துக்கள் மேலோங்கி இருக்கின்றுது.

அம்பேத்கரது சிந்தனைகளின் தாக்கம் உங்களுக்கு இருந்ததா..?
நான் :- அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட சமுகத்தை சேர்ந்த ஒரு தலைவர் என்று கேள்விப்பட்டிருந்தோமே தவிர அவரது சிந்தனைகள் எதுவும் எங்களுக்குத் தெரியாது. எங்கள் மக்கள் படும் துன்பங்களைப் பார்த்துத்தான் நாங்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டோம் ..எங்களுக்குப் பாடசாலைகளில் கல்வி கற்கும் போது ஏற்பட்ட தாக்குதல்களும் ..சாதி ரீதியாக உயர் சமுகத்தவரால் பட்ட கஷ்டங்களும் இப்படி நெருக்குவாரங்கள்தான் எங்களைப் போராட வைத்தது.

2000 இல் எடுத்த நேர்காணல் பிரசுரமானது "தலித் "இதழ் ஜீன் - 2003.இங்கு அம்பேத்கர் தான் சாதியத்திற்கு எதிராக போராடக் கூடிய சிந்தாந்தம் என்று சிறுபிள்ளைத் தனமாக இன்னும் இலங்கைத் தலித்தியவாதிகளும் கி அண்ணல் அம்பேத்தகார், தந்தை பெரியார் கிளிப்பிள்ளைகள் போல கற்றுக் கொண்டுள்ளார்கள். 1966ம் ஆண்டு போராட்ட வடிவத்தை தமிழகத்தை சேர்ந்த செயற்பாட்டாளர்கள் அறிந்திருக்கவில்லை என்பது ஒரு அவலமே. தோழர் டானியலை தலித்திய எழுத்தாளராக சுவீகரித்துக் கொள்கின்றார்கள். தலித்திய இலக்கிய ஆரம்ப காலங்களில் வாழ்ந்த தோழரின் எழுத்துக்கள் என்பது ஒடுக்குமுறை சிந்தனைவடிவம், வர்க்க அடக்குமுறை இவற்றின் ஊடாக சாதியத்தினை அணுகிய எழுத்தாளர். ஒடுக்குமுறைக்கு உட்பட்ட சமூக உறுப்பினர்தான் ஒடுக்குமுறைச் சமூகத்தைப் பற்றி துல்லியமாக எழுத முடியும் என்ன சிந்தனை வடிவத்தின் சொந்தக் காரர் அல்லர்.

தோழர் டானியல் அணியில் வந்த தோழர் Nanthiny Xavier கண்டனம்!
அது என்ன தலித் எழுத்தாளர் என்னும்பதம்.. நீங்களே சாதியை எழுத்தாளர்களுக்கும்சூட்டிவிட்டீர்களா? இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன். எழுத்தாளர் துரைகுணா எனப்பாவியுங்கள்! எனப் பிரகடனப்படுத்துகின்றார். ஆம் ஆயிரம் காலம் அடிமை

# “தலித்திய அரசியல் கோட்பாட்டை எதிர்ப்பது என்பது ஒடுக்கப்படும் மக்களையோ அல்லது அவர்களின் அவலநிலையை எதிர்ப்பதோ அல்ல. மாறாக சமூக மாற்றத்திற்கான இலக்கை நோக்கிய பயணத்தில் சமூகத்தில் சீர்திருத்தத்தை மாத்திரம் அல்ல அனைத்து ஒடுக்குமுறை வடிவங்களையும் எதிர்த்து போராடுவதாகும்”

என்றாயே அரிசனர் என்று பெயர் வைக்க யாராடா நாயே என்ற பாடலை பொருத்திப் பார்ப்பது பொருந்தும். புதிய சொல்லாடல்களை பொருத்தி அழைத்துக் கொள்வதன் ஊடாக சாதியத்தை இல்லாதிக்கிவிட முடியாது. தலித், அரிசனர், பஞ்சமர் என்பது புதிய சாதிகள் தான்.

அண்ணல் அம்பேத்தகார், தந்தை பெரியார் போன்றவர்கள் சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடியவர்கள். இவர்களிடத்தில் நிலப்பிரபுத்துவத்தில் உள்ள கூறுகளை தீர்க்கமாக எதிர்த்தார்கள். இதில் அவர்கள் சமரசம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவைப் பொறுத்த வரையில் அண்ணல் அம்பேத்தகார், தந்தை பெரியார் போன்றவர்களின் வரலாற்றுப் பாத்திரத்தினை மறுத்துவிட முடியாது. ஆனால் இவர்களின் வரலாற்றுப் பாத்திரம் என்பது இலங்கையைத் தொடவில்லை. அதேவேளை அண்ணல் அம்பேத்தகார், தந்தை பெரியார் இலங்கையில் இன்றைக்குப் பொருத்த நினைப்பது வரலாற்றுக் குருட்டு சிந்தனையாகும். மார்க்சியம் வழிகாட்டும்

அதேவேளை முதலாளித்துவ பொருள் உற்பத்தி என்பது சாதியத்தின் கட்டமைப்பை உடைக்கின்றது. இதில் அம்பேத்கர் முதலாளித்துவ ஜனநாயக உரிமையைக் கோரியவர். அவர் கோரிய முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சீர்திருத்தத்தைக் கொண்டு வரும். ஆனால் சமூகத்தை மாற்றிவிடாது. ஆனால் சிந்தனைத் தளத்தில் மாற்றம் கொண்டுவர மதம் மாற வேண்டும் என்ற சிந்தனை வடிவம் அவரிடம் இருந்தது. இதனால் பௌத்தத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டார். கன்பொல்லக் கிராமத்திலும் பௌத்தத்திற்கு சிலர் மாறினர். அடிப்படையில் தலித்தியம் என்பது மேற்கட்டுமானத்தில் சீர்திருத்தத்தைக் கோருவதாகவே இருக்கின்றது. மேல் கட்டுமானம் என்பது பொருளாதார அமைப்பின் மேல் இருக்கின்ற அரசு, இராணும், நீதி நிர்வாகம், சிந்தனைவடிவங்கள், நிறுவன அமைப்புக்களில் உள்ளவற்றில் சீர்திருத்தத்தை முன்னிறுத்துவதாகும். தலித்தியவாதிகள் மேற்கண்ட தந்துவவிசாரணை நடத்துவதற்கு தயாராக இல்லை. தேசியத்தின் இறைமைக்கான போராட்டம் என்பது புறநிலை தான் தீர்மானித்திருந்தது. சாதியக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் உற்பத்திக் கட்டமைப்பு சிதையாமல் தேசிய இயக்கங்களின் போராட்டம் என்பது வளர்ச்சியை அடைந்திருக்க முடியாது. சாதியக் கட்டமைப்பு உடைவிற்கு உள்ளாகியதால் தான் தேசியக்- முதலாளித்துவக் கட்டத்தை நோக்கிப் பயணித்து. இங்கு தேசிய- முதலாளித்துவ ஜனநாயகக் கட்டத்தை நோக்கி நகவினை மடைமாற்றுவது பிரதேச, சாதிய, மத உணர்வை ஊட்டுவது, பிளவுகளை உண்டாக்குவது அவசியமாகின்றது. இந்த பிளவு வேலை முறையின் ஊடாகவே தேசிய- முதலாளித்துவ ஜனநாயப் போராட்டங்களை சிதைப்பதாகும்.

“புறக்காரணங்கள் என்பவை மாற்றத்திற்கான சூழ்நிலை அகக் காரணங்கள் அம்மாற்றத்திற்கான அடிப்படை புறக் காரணங்கள் அகக் காரணங்கள் மூலம் தொழிற்படுகின்றன என்று பொருள் முதல் வாத இயங்கியல் கருதுகின்றது. பொருத்தமான ஒரு வெப்ப நிலையில் ஒரு முட்டை குஞ்சாக மாறுகின்றது. ஆனால் எந்த வெப்ப நிலையும் கல்லை குஞ்சாக மாற்ற முடியாது, காரணம் ஒவ்வொன்றுக்கும் வேறுபட்ட அடிப்படை உண்டு. தோழர் மா.ஓ.

தமிழ் தேசத்தின் இறைமைக்கான போராட்டம் என்பது புறக்காரணிகளால் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, பெருந்தேசிய இனத்தின் ஒடுக்குமுறை இவைகளே புறநிலைத் தாக்குதல். ஆக சாதியம் என்பது பிரதான முரண்பாடு என்ற நிலையை கடந்து விட்டது. உற்பத்தியில் சாதியம் உடைப்பது என்பது முக்கியமானதாகும். இந்தியாவில் அம்பேத்கார், பெரியாரியத்தினால் கூட முழுமையாக உற்பத்தியில் சாதியத்தினை சிதைக்க முடியவில்லை.

புறநிலைகள் தான் எம்மக்களை யுத்தத்திற்கு நோக்கி நகர்த்தியது, புறநிலை தான் எம்மை முள்ளிவாய்க்காலில் கொண்று குவித்தது. ஆனால் பொதுவெளிக்கு வராத (தேசத்தின் இறைமை பற்றி) முதலில் உள்வீட்டுப் பிரச்சனை இருக்கு அந்த வேலையைப் பார் என்று புத்தி சொல்கின்றார்கள். இவர்கள் தமிழர் என்ற அடையாளத்துடன் ஜனநாயக ரீதியாக கலக்கக் கூடாது என்று சாதிகளாக பிரிப்பது தான் தலித்தியம். தலித்தியம் என்பது தமிழகத்தில் சமூகத்தை சாதிய ரீதியாக பிரித்து வைத்துள்ளது. அனைத் தான் தமிழர் தேசத்திலும் செய்ய துடிக்கின்றார்கள்.

தலித்திய அரசியல் கோட்பாட்டை எதிர்ப்பது என்பது ஒடுக்கப்படும் மக்களையோ அல்லது அவர்களின் அவலநிலையை எதிர்ப்பதோ அல்ல. மாறாக சமூக மாற்றத்திற்கான இலக்கை நோக்கிய பயணத்தில் சமூகத்தில் சீர்திருத்தத்தை மாத்திரம் அல்ல அனைத்து ஒடுக்குமுறை வடிவங்களையும் எதிர்த்து போராடுவதாகும்.

இங்கு சாரி ரீதியா அணிதிரட்டப்பட வேண்டுமா அல்லது வர்க்க ரீதியாக அணிதிரட்ட வேண்டுமா என்பது பற்றிய தாகும். வர்க்க ரீதியான அணிதிரட்டல், அரசியல்மயப்படுத்தல் என்பது பண்பாட்டுத் தளத்தில், சிந்தனைத் தளத்தில்

மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அடையாள அரசியலை நம்புபவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அதன் தாற்பரியத்தினையும் முக்கியத்துவத்தினை உள்வாங்கிக் கொள்வதில்லை. இது ஒரு சமூக அவலம் தான்.

கருத்துருவாக்கிகள் எப்பவும் இருக்கின்ற சமூக அமைப்பையும், ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளை பாதுகாக்கும் வகையில் தான் தமது கருத்துக்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

அடித்தவனுக்கு அடி என்ற கோசம் வென்றதற்கே வர்க்க அணிதிரட்டல் முக்கியபாத்திரம் வகித்தது. சாதியம் இலங்கையில் உற்பத்திக் கட்டமைப்பை தீர்மானிக்கும் காரணியாக இல்லாது உடைக்கப்பட்டது (உணர்வுவேறு தொடர்கின்றது) இதுதான் ஜனநாயக சக்திகளின் வெற்றி. இதனை விளங்கிக் கொள்ள மார்க்சியப் பார்வையில் இருந்துதான் பெற முடியும். உங்கள் புத்தகமும் இதனை (வர்க்க ரீதியான இணைவு) வெளிப்படுத்தியதாக விமர்சனங்கள் வாசித்துள்ளேன். அதனை பலரும் வாசிக்க வேண்டும்.

ஒடுக்கும் வர்க்கத்தை வீழ்த்தாமல் சாதியை வீழ்த்த முடியாது . சாதியை வீழ்த்தாது தமிழ் தேசியத்தினையும் வளர்த்தெடுக்க முடியாது. ஏனெனில் சாதியின் தோற்றமே உழைப்பவன், ஏய்ப்பவன் இங்குதான் தொடங்கியது. அதேவேளை உற்பத்திக் கட்டமைப்பு என்பது கிராமப்புறங்களில் மாற்றம் கொள்ளாமல் வைத்திருப்பதில் ஆளும் வர்க்கத்துடன் இணைந்து அடையாள, சாதிய சிந்தனையாளர்கள் பங்காற்றியிருக்கின்றார்கள். இவர்கள் மாத்திரம் அல்ல பெரும் நீரோட்ட கருத்துருவாக்கிகளும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்லர்.

கருத்துருவாக்கிகள் எப்பவும் இருக்கின்ற சமூக அமைப்பையும், ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளை பாதுகாக்கும் வகையில் தான் தமது கருத்துக்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

முதலாளித்துவ- தேசிய - ஜனநாயகப் புரட்சிக்கான நிலையில் தலித்திய அரசியல் இவைகள் எல்லாம் போதைமை உள்ள சித்தாந்தங்கள். தலித்தியம் இன்றைய சிந்தனை வடிவம்

டேய் நீ பள்ளன் தேசிய - வர்க்கப் போராட்டத்தில்
இணையலாமா?
டேய் நீ நளவன் தேசிய - வர்க்கப் போராட்டத்தில்
இணையலாமா?
டேய் நீ பறையன் தேசிய - வர்க்கப் போராட்டத்தில்
இணையாமா?
டேய் நீ தலித்து தேசிய - வர்க்கப் போராட்டத்தில்
இணையலாமா?
டேய் நீ சக்கிலியன் தேசிய - வர்க்கப் போராட்டத்தில்
இணையலாமா?
டேய் எங்களை ஒடுக்கிறான்கள் அவர்களுடன் எவ்வாறு
வேலை செய்வாய்?

டேய் அவங்களுக்கு நாம் சமமா? என்று மனிதரை சிந்திக்கவிடாது வைத்திருக்கும் சிந்தனைத் தளம் தொடர்கின்றது. இது சலுகை, இலவசம், சமூக நீதி என்பதை மட்டுமே முன்னிறுத்திக் கொண்டிருக்கின்றது. உற்பத்தி முறையை மாற்றுவது அல்ல.

இந்தக் குறுகிய அடையாளப் போக்கை உடைக்கும் வகையாக சிந்திப்பது இடம்பெறுகின்றது. தமிழகத்தில் அடையாள அரசியலுக்கு உட்பட்டுத் தான் சமூகத்தில் கருத்துருவாக்கியுள்ளது, சமூகத்தையும் மேலும் அடையாள ரீதியாக அணிதிரட்டி உள்ளது. அதே போக்கில் பயணித்த தோழர் திருமாவின் புத்தக வெளியீட்டு பேச்சை கேட்கும் போது ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. பிரதான மைய ஓட்டத்தில் இணைக்கும் போராட்ட வடிவம் என்பது சாதிய- தலித்திய அடையாள அரசியலும் பார்க்க முற்போக்குப் பாத்திரத்தினை கொடுக்கக் கூடிய முயற்சியாகும்.

1980களில் உருவாக்கிய அடையாள அரசியலை முன்னிறுத்திய தலித்திய, சாதியக் கட்சிகளின் பின்னால் சமூகம் என்பது சாதிய ரீதியாக அணிதிரட்டப்பட்டுள்ளது.

சொறி சிரங்கினை சொறிந்து புண்ணாக்கி சீழ் வடிய வைப்பது போல தலித்திய- சாதிய - அடையாள அரசியல் அமைப்புக்கள் சமூகத்தைப் பிரிந்துள்ளது. சீழை நுகர்ந்து திருப்திக் கொள்ளும் சுயநல அரசியல் போக்காகும்.

தேசியம் என்பது பழைய உற்பத்தியை உடைத்துக் கொண்டு தான் முன்னேறுகின்றதை அடித்தவனுக்கு அடிஎன்று வெற்றி கொண்ட போராட்ட வரலாறு நம்மிடம் உள்ளது. அது உற்பத்தியில் தீர்மானிக்கும் நிலையை உடைத்து முன்னேறியது. அடையாள- தலித்திய அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்வதில்லை.

சாதிய உற்பத்திக் கட்டமைப்பு பெரும்விதிதத்தில் உடைந்துள்ளதும் அதன் வெளிப்பாடுதான் தேசத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தது. தேசத்திற்கான போராட்டம் என்பது அடித்தளம் இல்லாது முன்னேறியிருக்க முடியாது. சமூகத்தின் எழுச்சி என்பது அதற்கான சூழல் இல்லாவிடின் எவையும் முன்னேற முடியாது. --“தமிழ்தேசியம் என்பதை தமிழ் ஜாதிய நிலவுடைமையின் சிந்தனை-- தமிழ்தேசியம் நேரடியான ஜாதி-நிலவுடமைச் சமூகத்திற்கானது -“ இவைகள் அகமுரண்பாடுகளை தங்கவைத்துக் கொள்ளும் சிந்தனைவடிவத்தில் இருந்து வருவதாகும். மேலும் தலித்தியம் என்பதை நிறுவுவதற்கு தந்தை பெரியார் முன்னிறுத்தப்படுகின்றார். ஆனால் தந்தை பெரியாரின் காலத்தில் தேவையாக இருந்த முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கை அதன் பாலான செயற்பாடுகள் என்பது மட்டுப்பட்டதாக இருந்துள்ளது. இதனால் தந்தை பெரியாரிடம் தேசிய இனம், தேசத்தின் இறைமை பற்றிய தேடலை பெற்றிட முடியாது. வளர்ச்சி நிலைக்கு ஏற்பத் தான் நிகழ்வுகள் முன்னோக்கிச் செல்கின்றன. எனவே தேசியம் பற்றியதை அது தோழர் லெனின், தோழர் ஸ்ராலினிடம் தேடவேண்டியுள்ளது.

பண்பாட்டுத் தளத்தில் நிலவுவது ஆபத்துத் தான் ஆனால் அதிலும் விட ஆபத்து உற்பத்திக் கட்டமைப்பில் சாதியம் உடைக்கபடாமல் இருக்கும் நிலையாகும். இங்கு உற்பத்திக் கட்டமைப்பில் சாதியம் உடைக்கப்படாத காரணத்தினால் தமிழ் தேசியம் தமிழகத்தில் வரமுடியவில்லை. உற்பத்திக் கட்டமைப்பின் சிதைவு தமிழ் தேசியத்தினை வளர்த்தது.

திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்படும் மனிதர்கள். அடையாள அரசியல புதுப்பிக்கும் போக்கை கொண்டு செயற்படுவதும், மனிதர்களின் சிந்தனையை சாதியந்தன் புத்தி குலமந்தன் ஆசாரம் என்ற கருத்துமுதல்வாத சிந்தனையில் தேடுவதாக உள்ளார்கள

## பாலன் தோழரின்

# லண்டனில் பிள்ளையார்

### நான்காம் அத்தியாயம்

தமிழர்களைப் பார்த்ததும் மனம் மகிழ்ந்த பிள்ளையார் உள்ளே சென்று அவர்களுடன் சிறிது நேரம் உரையாடினால் மனம் கொஞ்சம் ஆறுதல் அடையும் என்ற நம்பிக்கையில் உள்ளே சென்றார்.

உள்ளே சென்றதும் அங்கு பிறந்தநாள் விழா நடக்கிறது என்பதையும் அது கரவெட்டி அன்பன் குணசீலனின் விழா என்பதையும் அறிந்ததும் பிள்ளையார் அதிர்ச்சி அடைந்தார்.
ஏனெனில் குணசீலனின் தாயார் நாட்டில் அகதி
முகாமில் இருக்கிறார். அங்கு அவர் ஒருநேரச் சாப்பாட்டிற்கே மிகவும் கஸ்டப்படுகின்றார். மகன் இங்கு பல ஆயிரம் செலவு செய்து பிறந்தநாள் கொண்டாடுது.
புருசன் செத்தபின்பு தோசை சுட்டு வித்து இந்த மகனை எந்தளவு கஸ்டப்பட்டு படிக்க வைத்தவ என்பதும் மகன் ஆசைப்படுகிறான் என்பதற்காக தனது ஒரே சொத்தான வீட்டை விற்று லண்டனுக்கு அனுப்பி வைத்தவ என்பதும் கரவெட்டி மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம்.
லண்டன் வந்த புதிசில் ஒழுங்காக கடிதம் போட்டுவந்த இந்த மகன் விசாவுக்காக லண்டன் பெட்டை ஒன்றை கலியாணம் செய்தபின்னர் கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டது.

அங்கு பெத்த வயிறு பத்தி எரியுது .இங்கு பிள்ளை வயிறு முட்ட பியர் குடித்துவிட்டு ஆட்டம் போடுது. கேட்டால் பிறந்தநாள் கொண்டாட்டம் என்று சொல்லுது.
சிறிதுநேரத்தில் லைற் அணைக்கப்பட்டு கலர் வெளிச்சம் பீச்சியடிக்கப்பட்டது.

பெரிய சத்தத்தில் மியுசிக் போடப்பட்டது. வகை வகையாக குடிவகைகள் பரிமாறப்பட்டன.
ஆண் பெண் வித்தியாசம் இன்றி பெரியவர் சிறியவர் பாகுபாடு இன்றி அனைவரும் நன்றாக குடித்தனர். அதிலும் இளம்பெண்கள் ஒருகையில் பியர் கிளாசுடனும் மறுகையில் பொடியன்களுடனும் கட்டிப்பிடித்து போட்ட ஆட்டம் வார்த்தையில் கூறமுடியாது.

கேட்டால் இதுதான் டிஸ்கோ டான்ஸ் என்று சொல்லுதுகள்.
திடீரென ஒரு பெட்டை கூக்குரல் இட்டுக்கொண்டு ஓடிவந்தாள். தான் ஆடிக்கொண்டிருக்கும்போது தன் தொடையில் ஒருவன் கிள்ளிப்போட்டான் என முறையிட்டாள்.
இதைக்கேட்ட அவள் காதலன் ஆடும் போது தவறுதலாக கை பட்டிருக்கும்.இதைப் பெரிதுபடுத்தாதே என்று சமாளித்தான்.

ஆனால் அவள் விடவில்லை. அவன் எங்க எதிர் கோஸ்டியைச் சேர்ந்தவன். வேண்டுமென்றே இடித்திருக்கிறான். நீ ஒரு உண்மையான ஆம்பிளை தானா? உனக்கு மானம் ரோஸம் இல்லையா? இந் நேரம் அவனை குத்திக் குடலை எடுத்திருக்க வேண்டாமா? என ஆத்திரத்தில் நுனி நாக்கு ஆங்கிலத்தில் கத்திக்கொண்டிருந்தாள்.

**"திடீரென ஒரு பெட்டை கூக்குரல் இட்டுக்கொண்டு ஓடிவந்தாள். தான் ஆடிக்கொண்டிருக்கும்போது தன் தொடையில் ஒருவன் கிள்ளிப்போட்டான் என முறையிட்டாள்."**

உண்மையிலே அவள் போட்டிருக்கும் அரை குறை ஆடையில் யார் பார்த்தாலும் அவள் மீது கை போட்டுப் பார்க்கத் தோன்றும்.

ஆனால் அப் பொடியனின் கை வேண்டுமென்றே படவில்லை என்றும் இருப்பினும் அவன் உடனே sorry சொன்னான் என்று அருகில் இருந்த ஒருவர் கூறினார்.

ஆனால் அவள் இதை ஒத்துக்கொள்ளவில்லை.
மாறாக அவனை உடனே வெட்டு கொத்து என்று கத்திக்கொண்டிருந்தாள்.

இதனால் வேறு வழியின்றி அவள் காதலன் எழும்பிச்சென்று ஏன் என் ஆள் மீது கை வைத்தாய் என்று அப் பொடியனிடம் கேட்டான்.

அதற்கு அப் பொடியன் நான் அப்படித்தான் செய்வேன். நீ என்னடா செய்வாய்? உன்ரை ஆள் பெரிய பத்தினியோ? போன மாதம் வரை எங்க ஆளுகளுடன் கூத்தடித்துத் திரிந்தவள் தானே? என்றான்.

இதைக் கேட்டதும் காதலன் ஆத்திரத்தில் அவன் கன்னத்தில் அறைந்தான்.

அவன் மட்டுமன்றி அவன்கூட இருந்து தண்ணியடித்துக்கொண்டிருந்த சில பொடியங்களும் அவனுக்கு தரும அடி கொடுத்தனர்.
அடிவாங்கிய அப் பொடியன் என் மேலேயாடா கை வைத்தனீங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் யார் என்று காட்டுறன் என்று கத்திக்கொண்டு வெளியே ஓடினான்.

தனது hand phone யை எடுத்து யாருக்கோ பேசினான்.
சிறிது நேரத்தில் ஆறேழு கார்கள் வந்து நின்றன. எப்படி வந்தார்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை. மொத்தம் இருபது முப்பது பேர் வரையில் உள்ளே இருந்து குதித்தார்கள். எல்லோருக்கும் வயது பதினேழு அல்லது பதினெட்டுத்தான் இருக்கும்.

கையில் வாள் கத்திகள் வைத்திருந்தார்கள். நிறை போதையில் இருந்தார்கள். தலையில் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

அடிவாங்கிய பொடியன் இவர்களை உள்ளே அழைத்துவந்தான்.

இவர்கள் உள்ளே வந்தபோது அடித்த பொடியனும் பிரச்சனையை உருவாக்கிய பெட்டையும் இருக்கவில்லை. எப்படித்தான் மாயமாய் மறைந்தார்களோ தெரியவில்லை. அடி வாங்கிய பொடியன் யாரையோ பார்த்து கை நீட்ட உடனே வந்த பொடியன்களில் ஒருவன் தன் மடியில் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து சுட்டான்.

படீர் என வெடிச் சத்தம் கேட்டது.

தலையில் வெடி பட்ட இளைஞன் ஒருவன் அலறியபடி பொத்தென விழுந்தான். விழுந்த கணமே அவன் உயிர் பிரிந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அலறியடித்துக்கொண்டு அங்கும் இங்கும் ஓடினார்கள். சுட்ட கோஸ்டி காரில் ஏறி பறந்துவிட்டது.

பிள்ளையார் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார்.

குணசீலன் ஓடி வந்து பிள்ளையாரிடம் இது கோஸ்டி சண்டை. இது இங்கே சகஜம். போகப்போக உங்களுக்கும் சகஜமாகிவிடும். இன்னும் கொஞ்ச நேரத்தில் பொலிஸ் வந்துவிடும். விசா இல்லாதவங்களை பிடிப்பாங்கள். அதனால நீங்கள் உடனே புறப்படுங்கள். என்று கூறி பிள்ளையாரின் கையை பிடித்து இழுத்துக்கொண்டு சென்று ஒரு காரினில் ஏற்றினார்.

காரில் இருந்த பெண்ணிடம் டீச்சர் பிளீஸ் இவர் லண்டனுக்கு புதிசு. உங்க வீட்டுப்பக்கம்தான் இவரும் இருக்கிறார். அதனாலே போற வழியிலே இவரையும் இறக்கிவிடுங்கோ என்று கூறிவிட்டு அவர் பதிலையும் கேட்காமல் உள்ளே ஓடிச்சென்றார்.

பிள்ளையார் இது குறித்து பெரிது படுத்தவில்லை. ஏனெனில் அந்த நேரத்தில் குணசீலன் தனக்காக இந்தளவு செய்ததே அவருக்கு ஆச்சரியம்தான்.

தமிழ்மாறனின்

# நிஜத்துடன் நிலவனுடன் ஒரு நேர்காணல்



ஈழத்துக் கவிஞரும் எழுத்தாளரும் சுயாதீன ஊடகவியலாளருமாவார். ஈழத்தின் வடபகுதியான யாழ் மாவட்டத்தில் பிறந்து வன்னி மண்ணில் வளர்ந்தவரும், வாழ்ந்தவரும் ஈழத்தின் நான்காம்கட்டத்தில் இடம் பெற்ற போர், போர்க்கால மக்களின் உண்மைக் கதைகள் ஈழத்தின் நிலவரங்கள் போன்றவற்றைக் கட்டுரைகளின் வாயிலாக தொடர்ச்சியாக பல்வேறு ஊடகங்களில் எழுதி வருகின்ற இவர், நடனம், நாடகம், வானொலி நிகழ்ச்சித் தொகுப்பு மற்றும் புகைப்படம், ஆவணப்படம் முதலிய துறைகளிலும் மிக இளம் வயதிலேயே பரவலாக அறியப்பட்டவர். சமகாலத்தின் மிகவலிமையுடைய குரலாக கருதப்படுபவர். கவிதைகளிலும் கட்டுரைகளிலும் மக்களின் வாழ்வை அழுத்தமாகப் பதிவு செய்வதுடன் நேர்காணல்களின் ஊடாகவும் ஈழத்து மக்களின் உளவியல் நோக்கில் தனது குரலினை பதிவு செய்திருக்கின்றார். ஈழத்தில் 2006ஆம் ஆண்டின் **"சிறந்த ஆடல் செல்வன்"** என்னும் விருது இவருக்கு தமிழீழத் தேசியத் தலைவரினால் வழங்கப்பட்டிருந்தது. பரிசுகள் விருதுகள்,, பாராட்டுக்கள், கௌரவங்கள் என்றெல்லாம், அவருக்குக் கிடைத்த தேசிய அங்கீகாரங்கள் பல. அனைத்தையும் மௌனமாக ஏற்றுக்கொண்டு அமைதியாக தன்னியல்வு மாறாத கலைஞராகவும் ஊடகவியலாளராகவும் உள்ள யாழ் பல்கலைக்கழக பட்டதாரியான நிஜத்தடன் நிலவனுடன் ஒரு நேர்காணல்



**உங்கள் பல்துறைசார் நிபுணத்துவ உருவாக்கத்தில் உங்கள் இளமைக்காலச் சூழல் செலுத்திய தாக்கம் பற்றி சொல்லுங்கள்?**

எனது வாழ்வும் வளர்ப்பும் பற்றித் தாராளமாகவே சொல்லலாம். கலையும் எழுத்தும் சார்ந்த ஒரு கிராமத்தில் பிறந்தேன். நாட்டு யுத்தம் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என இலக்கியமும் கலையும் சார்ந்த ஒரு சூழலில் தான் நான் சிறு வயதில் வளர்ந்தேன். தாயகம் சிறுவர் இல்லத்தில் வளரும்போது அங்கிருந்த சூழல் பல்துறை சார்ந்த வீரர்களின் அனுபவங்களும் பயிற்சிகளும் பல்துறை சார் விடயங்களில் என்னை வளர்த்துக் கொள்ள வழி செய்தன.

எனது அதிகாலைகள் புலிகளின் குரல் வானொலியில் தான் விடிந்தன. மாவீரர் பாடல் இசையால் கவரப்பட்டு, சிறுவயதில் நடனம் நாடகம் என எனக்கிருந்த ஆர்வத்தில் வீதி நாடக அணியுடன்இணைந்து பயின்றேன். இவ்வாறு எனது பல்துறைசார் திறமைகள் வெளிப்பட்டதற்கான ஆரம்பச் சூழல் விடுதலைப் போரட்டத்தின் வீதி நாடகங்களாகத்தான் அமைந்திருந்தது.

**"தாயகம் சிறுவர் இல்லத்தில் படித்துக்கொண்டிருக்கும் போது கவிதை எனத் தெரியாது பல வசனங்கள் கொண்ட சிறிய பந்திகளை எனது பாடக் கொப்பியின் பின் பகுதியில் எழுதி மறைத்து வைத்திருக்கிற காலத்தில், நான் அன்பாக அண்ணா என்றழைக்கும் சாதா தாடி மதன் தர்மேந்திரா ஆகியோர் எனது கவிதைகளை பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார்கள்"**

**நாடகத்துறையில் நீங்கள் நுழைவதற்கு ஏதுவான காரணிகள் எவை ?**

1992களில் நான் நாடகத்துறையிலும் விடுதலைப் போராட்டத்தில் கலைவடிவங்களிலும் என்னையும் இணைத்து வீதி நாடகங்களைத்தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் கிராமம்கிரமமாக சைக்கிளில் சென்று நடித்தது தான் எனக்கு அதிக பாடங்களைத் தந்தது என்று சொல்லலாம் . என்னை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு செல்லும் பொழுது பல களச்சமர் கதைகளைசொல்லிக்கொண்டு மூத்த பேராளிகள் வருவார்கள். இவைகளே எனது சிறு வயதில் இருந்து இன்று வரை அரங்கத்தினூடக எமது போராட்டத்தின் பதிவுகளை வெளிப்படுத்த முடியும் என்றநம்பிக்கையைத் தந்திருக்கிறன

**வீதி நாடகம் பற்றி சொல்ல முடியுமா ?**

நான் பல வீதி நாடகத்தில் நேரடியாக வீதியில் இறங்கி எங்கள் செய்திகளைச் சனங்களுக்குச் சொல்லுவோம். அதை, நவீன முறையாகவோ, இசை வடிவாகவோ, ஆடல் பாடல் மூலமாகவோ, சிலைபோல் நிற்றல் , காட்சிப்படுத்தல் மூலமாகவோ நாங்கள் பல வடிவங்களினாலும் சொல்லியிருக்கின்றோம். அடிப்படைச் செய்தி என்னவென்றால், சனங்களுக்கு ஒரு விழிப்புணர்வை அல்லதுஎச்சரிக்கையைக் கொடுப்பதாகும். இதை நாங்கள் சந்திகள்,விளையாட்டு மைதானங்கள் எனச் சனங்கள் கூடும் இடங்களில் உணர்வு, உடல், மொழி என இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் உரியசெய்தியினை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதாக அமைத்திருந்தோம்..

**நீங்கள் எழுதவந்த பின்புலத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்?**

பாரம்பரியங்களும் பண்பாடுகளும் மாறாமல் இருந்த எனது போர் வாழ்வும் இடப்பெயர்வுகளும் உயிர்கள் மற்றும் உடமைகள் இழப்புக்கள், கல்வியின் இழப்பு என்பவற்றோடு என்னைச் சூழ்ந்த தனிமைஅச்சம்,கவலை, வீரம், கோபம் என என்னுள் எழுந்த உணர்வுகளில் இருந்தும் தப்பிப்பிழைத்த என் உள்ளக்கிடக்கைகளை பல புனைபெயர்களில் கவிதை,கட்டுரை,நேர்காணல் என எழுத ஆரம்பித்தேன்.

ஒருவிதமான நெருக்கடி, வெறுமை போர் எம்மைச் சூழும் பொழுது எம்மவர்களின் தியாகங்களை வெளிப்படுத்திட கலை இலக்கியத்தின் மீதான தேடல் என் மனதில் உதித்தது. ஈழத்தின்போர்ச்சூழலில் வாழ்ந்து கொண்டு அந்த வாழ்வை அந்த மண்ணோடு மண்ணாக அனுபவித்து பதிவாக்கி எங்கள் தியாகங்களையும் போர் வாழ்வு விடுதலையினையும்ஆவணப படுத்துவதற்காகவே எழுத்துத் துறையில் பிரவேசிக்க நேர்ந்தது

**உங்கள் கவிதை பயணத்தின் ஆரம்ப காலகட்டம் அதன் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுங்கள்?**

நான் முன்னர் கூறியதுபோல் தாயகம் சிறுவர் இல்லத்தில் படித்துக்கொண்டிருக்கும் போது கவிதை எனத் தெரியாது பல வசனங்கள் கொண்ட சிறிய பந்திகளை எனது பாடக் கொப்பியின் பின் பகுதியில் எழுதி மறைத்து வைத்திருக்கிற காலத்தில், நான் அன்பாக அண்ணா என்றழைக்கும் சாதா தாடி மதன் தர்மேந்திரா ஆகியோர் எனது கவிதைகளை பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார்கள் அந்தக்கவிதைகளும் பிரசுரமாயின.. பின்னர் தொடர்ந்து எழுதவேண்டும் என்ற ஊக்கம் தந்தார்கள்.

இரத்தமும் சதையுமாக எனது வாழ்வினைப் பதிவுசெய்த என் நாட்குறிப்பேடு காலப்போக்கில் பத்திரிகைசஞ்சிகை என கவிதைப் பயணம் ஆரம்பமாகியது. மக்களின் அடையாள அழிப்புகளும் , திறந்தவெளிச்சிறைச்சாலையில் வாழும் மக்களின் அச்சமும் காணாமல் ஆக்கப்பட்டு அறியப்படாதகொலைகளும் அடிமைகளாக வாழமாட்டோம் என்றுரைத்து நின்று பின்னர் வீதியோரங்களிலும் பற்றைகளிற்குள்ளும் புதையுண்டுபோன எம் சக தோழர் தோழியரின் வாழ்வும் விடுதலைப்பற்றுத்தியாகங்களும் போர் அவலம், மண்ணின் மகிமை ,சமூகப்பிரச்சனை மற்றும் பண்பாடு பற்றி எல்லாம் புதுக்கவிதைகளில் பல வருடங்களாக எழுதி வருகின்றேன். முதல் கவிதைதொகுதியானச(ன்)னத்தின் சுவடுகள் என்ற நூல் யுத்தம் பற்றியும் அதனால் அல்லல் படும் மக்கள் பற்றியுமே வெளிவந்திருக்கின்றது .

2008 , 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் திட்டமிடப்பட்டு போர்தவிர்ப்புவலயம்எனஅறிவிக்கப்பட்ட இடங்களில் தமிழினப்படுகொலைகளை முள்ளிவாய்க்கால் வரை அரங்கேற்றி இருந்தார்கள். .

**விடுதலைப் போராட்டத்தில் கலைவடிவங்களின் பங்கு எந்த அளவில் இருந்துள்ளது?**

எங்களின் விடுதலைப் போராட்டத்தில் கலை வடிவங்களுக்குள் வாழ்ந்தவன் என்ற வகையில் விடுதலைப் போராட்டத்தில் கலைவடிவங்கள் பங்காற்றி வந்தன என்பதை உறுதியாகச்சொல்வேன்! எல்லாக் கலைகளும் ஆக்கபூர்வமாக இன விடுதலை சமூகமாற்றம் விழிப்புணர்வு அரசியல் பிரச்சார என பல பரிமாணங்களைக் கொண்டு கலைப் படைப்புகள்மேலோங்கி இருந்திருக்கிறன. எல்லாக் கலைச்சாதனங்களுமே மிகவும் வலுவான முறையில் முன்னெடுக்கபட்டிருந்தன. இயல் இசை நாடகம் என்று பார்த்தாலும் சரி, கூத்து பாட்டு என்று பார்த்தாலும்சரி, அரங்கு வலுவான கலையாக முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தது.இந்தக் கலைவடிவங்களில் எங்களுடைய பாரம்பரியக்கலையம்சங்கள் பல்வேறு வழிவகைகளில் எடுத்துக்கையாளப்பட்டிருக்கின்றன. அதில் சிற்பம், ஓவியம், கவிதை, ஆடல்கள், படங்கள் குறும்படங்கள் வாத்தியங்கள், பாடல்கள், நாடகங்கள் என எல்லா வடிவங்களும் அடங்கியுள்ளன. மக்கள் மத்தியில் தொடர்பு கொள்வதற்கு ஒரு வலுவான வழிமுறையாக இவை இனங்காணப்பட்டு அதனூடாக மக்களை ஆற்றுப்படுத்துவதில் பெரும் பங்கினைக் கலைவடிவங்கள் கொண்டிருந்தன. இவைகள் அனைத்தும்பாரபரியம் கலாசாரம் என எமது பண்பாட்டு விழுமியங்களும் மக்களை நெறிப்படுத்தி இருக்கின்றன என்றே சொல்லமுடியும்

**யுத்தத்தினால் மக்கள் எவ்வாறான அவலங்களை எதிர்கொள்கிறார்கள் ?**

போர்க்கால வாழ்வில் அமிழ்ந்திருக்கும் அவலமும் அழிவும் நிறைந்த வாழ்வைப் பல ஆண்டு காலம் மக்கள் வாழ்ந்து வந்த போதிலும், 2008 , 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் திட்டமிடப்பட்டு போர் தவிர்ப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இடங்களில் தமிழினப்படுகொலைகளை முள்ளிவாய்க்கால் வரை அரங்கேற்றி இருந்தார்கள். .

சிங்கள அரசு இறுதிக்கட்ட யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பல ஆயிரக்கணக்கான மக்களை ஈழ நிலத்தில் விதைத்தது . ஈழ மண்ணில் துடிதுடித்து வீழ்ந்திட்ட அந்த மகத்தான மனிதர்களின் உயிர் உறையும் கதைகள் ஏராளம் ஏராளம்.

இன்று எத்தனையோ பேர் எங்கள் தேசத்தின் இருட்டு மூலைகளுக்குள் முடமாகிப் போயிருக்கின்றார்கள். அடிமைகளாக வாழமாட்டோம் என்றுரைத்தவர்கள் வீதியோரங்களிலும் பற்றைகளிற்குள்ளும்புதையுண்டு போனார்கள். கைதானோர், சரணடைந்தோர், காணாமல் ஆக்கப்பட்டோர், தடுப்பு சிறைவாழ்வு என உலகத்தில் நடந்திராத கொடுமையான போர் நடந்தேறி இருந்தது தமிழ் மக்கள் சொற்களால் எழுத முடியாத துயரங்களைச் சுமந்தார்கள் - இன்னமும் சுமக்கிறார்கள்.

**இவை பற்றி உங்கள் உணர்வுகள் எவ்வாறானவை?**

எமது உரிமைக்காக எமது வாழ்வியலுக்காக சுயநிர்ணய உரிமைப்போரை ஈழத்தில் தமிழர்கள் நடத்தினார்கள். அதனால்தான் எமது உரிமைப்போராட்டத்தில் நாம் நிம்மதியாக வாழவேண்டும் என்றஒரு சிந்தனையை மட்டும் மனதில் சுமந்தவர்களாய் எதையும் எதிர்பார்க்காத மனிதர்களாய் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஈழ மண்ணில் துடிதுடித்து வீழ்ந்தார்கள். போராளிகளின் தாக்குதல்களின்பின்னால் நிம்மதியை தேடுகிற வாழ்வுக்காக ஏங்குகிற உணர்வு இருக்கிறது. சனங்களின் ஏக்கம் இருக்கிறது. வாழ்வுக்கான பெரும் கனவு இருக்கிறது. எங்களை அடிமையாக்கி எங்கள் வாழ்வை அழித்து வாழ்விடத்தை அழித்து மண்ணை அள்ளுகிற கனவுடன் இலங்கை அரசு இருக்கிறதால் இப்படியான பல உணர்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

**போர்த்தவிர்ப்பு வலய மனிதநேயப் பணி பற்றிக் கூற முடியுமா ?**

நிச்சயமாகக் கூற முடியும் ஈழத்தில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போர்த்தவிர்ப்பு வலயப் பகுதியில் நான் ஒரு மனிதநேயப் பணியாளர் பணியில் இருந்தேன். உண்மையில் சிறிலங்கா அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த போர்த்தவிர்ப்பு வலயங்களிலேயே அரச படையினரின் அதிகளவிலான எறிகணை வீச்சுக்களும் விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றன.பாரிய மனிதப் பேரவலம் அரங்கேறியதும் இங்குதான்.

சிறிலங்கா அரசினால் முதலில் அறிவிக்கப்பட்டிருந்த போர்த்தவிர்ப்பு வலயமாக உடையார்கட்டு சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய பிரதேசங்கள் அடங்குகின .

இந்த பிரதேசங்களில்படையினர் அகோரமான எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டனர். இவ்வாறு பல சம்பவங்களில் ஒரு விடயத்தினை பதிவு செய்கின்றேன்

சுதந்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் அரசசார்பற்ற நிறுவனத்தினர்வழங்கிக்கொண்டிருந்தஉணவுப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கூடி நின்ற பல நூற்றுக்கணக்கான மக்களை இலக்குவைத்துப் படையினர் மேற்கொண்ட

எறிகணை வீச்சில் பல பொதுமக்கள் அவ்விடத்திலேயே கோரமாகப் பலியாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல இரண்டாவது தடவையாக அரசு அறிவித்த போர்த்தவிர்ப்பு வலயமான மாத்தளன் பொக்கணை வலைஞர்மடம் முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலேயே உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கக்கூடிய தமிழினப் படுகொலையை அரச படையினர் மேற்கொண்டனர்.

பதுங்குழிகள் சவக்கிடங்குகளாகிட, பாதி முடியும் சிதறுண்ட உடலங்களை அள்ளிக்குவித்தும் அரை உயிருடன் அந்தரிக்கவிட்ட நிலைமையும் தண்ணீர் உணவு மருந்து என அடிப்படை வசதிகள் கூடஇல்லாது துடிதுடித்து வீழ்ந்தவர்களுடன் பயணித்த சாட்சிகளில் நானும் ஒருவன்

வாழ்நிலம் எல்லாவற்றையும் இழந்து அரசின் பயங்கர ஆயுதங்களுக்கு அஞ்சியபடி ஒரு வாழ்க்கை. குழந்தைகள் பெண்கள் மாணவர்கள் எல்லோரதும் கனவையும் விடுதலை உணர்வையும் அழிக்கிறதிட்டத்துடன் போர் தந்த அவலங்களுக்குடன் இராணுவத்திடம் சரணடைந்தேன்.

## போரின் பின்னர் சமூக பண்பாட்டு பொருளாதாரம் பற்றி உங்கள் கருத்து ?

நாங்கள் பலமான சமூகமாக வாழ்வதற்கான ஆதாரங்களைச் சிங்கள அரசு அழித்துவரும் சூழல் காணப்படுகின்றது. இன்றைய இன அழிப்பின் யுத்தமும்,

அதனால் ஏற்பட்டிருக்கின்ற இடம்பெயர்வுகளும் மக்களை பாரம்பரிய அறிவுசார் முறையிலிருந்து அன்னியப் படுத்தியிருக்கின்றன அப்புறப்படுத்தியிருக்கின்றன. உள்ளூர் அறிவுத்திறனை கொண்ட ஒரு சமூக

பொருளாதார கட்டமைப்புநோக்கில் பார்க்கும்போது, இதை ஒரு மிக மோசமான இழப்பாக பார்க்கிறோம். சமூக பண்பாட்டு

பொருளாதார ரீதியாக பொதுத்தன்மைகளும் வித்தியாசங்களும் கொண்டவை. அதே நேரம் எல்லாச மூகங்களுக்கும் உள்ளது போல் அந்தப் பிராந்தியங்களில், பிராந்தியங்களுக்கிடையில் காணப்படுகின்ற ஆதிக்க நிலைமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியத் தேவையாக இருக்கிறது.

எம் இனத்தின் கலை கலாசாரம் பண்பாட்டு பொருளாதாரம் என 2008 2009இல் ஏற்பட்ட பாரிய யுத்த அனர்த்தத்தின் பின்னர் உளவியல் ரீதியாக மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு தனிநபர் சாதாரணமாகவே உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றமை நாம் அறிந்த உண்மை. அந்தவகையில் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதில் கூட பல உடல் உளவியல் ரீதியானபின்னடைவுகள் எற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது சமூக பண்பாட்டு பொருளாதாரம் பற்றி பார்க்கும் போது பாரிய வீழ்ச்சி காணப்படுகிறது என்றுதான் கூறமுடியும்

தமது சொந்த இடங்களில் தத்தமது மத அனுஷ்டானங்களையும்



அது சார்ந்த நிகழ்வுகளையும் முறையாகப் பின்பற்றி வந்த மக்கள் யுத்தத்தின் பின்னர் மத நெறிமுறைகளிலிருந்து விடு பட்டவர்களாகக்காணப்படுகின்றனர். அது அவர்களுக்கு ஒரு வெறுமை உணர்வைக் கொடுப்பதும் உண்மையே.

நெறி பிறழ்வான பாலியல் நடத்தை, இளவயதுத் திருமணம்,ஆழமான காதல் உறவுகள், குடும்ப வன்முறைகள், வீட்டு வன்முறை, ஒருவர் பல திருமணங்களைச் செய்தல், பலருடன் இணைந்துவாழுதல், போதைப்பொருள், பாவனை பெற்றோர்களின் செயற்பாடுகளினால் சிறுவர்கள் பாதிப்படைதல், புதிய புதிய நோய்கள் உருவாகுதல், நபர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடு ஏற்படுதல், தீயபழக்க வழக்கங்கள் ஏற்படுதல் (களவு), பாலியல் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை, சிறியவர்கள் பெரியோர்களை மதிக்காமை, நாளாந்த செயற்பாடுகளை ஒழுங்காக மேற்கொள்ளமுடியாமை, புதிய கலாசார முறைகள் உருவாகுதல், குடும்பம் சார் விடங்களில் இராணுவத்தின் தலையீடு,என ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது.

இடப்பெயர்வும் எம்மக்களின் வாழ்விடங்களை வாழ்வாதரங்களை எல்லாம் தொலைத்துவிட்டு ஒரு அன்னியப்படுத்தப்பட்ட நிலையில் தங்கி வாழ்கின்ற சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது. இதுளங்களை மிக ஆபத்தான ஒரு சமூக, பொருளாதார நிலைக்கு இட்டுச்செல்கிறது. மேலும், தாராளமயம் மிகத்தீவிரமாக நடைமுறைபடுத்தப்படுவதற்கு, உள்ளூர் முரண்பாடும், அதன் காரணமாக எழுந்தபோரும்

பயன்படுத்தப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும். மேலும் இந்த இடப்பெயர்வு என்பது, உற்பத்தி சக்தியாக இருந்த எங்களை தங்கிவாழும் ஒரு சமூகமாக மாற்றி, குறைந்த ஊதியத்தொழிலாளர்களாக மாற்றும் நிலைமைளையும், வெறும் நுகர்வு சக்திகளாக வாழுகின்ற நிலைகளையுமே ஏற்படுத்தியிருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

## இன்றைய நிலையில் பெண்கள் எத்தைகய பிரச்சனைகளை சந்திக்கிறார்கள்?

**போர்சார்ந்த நடவடிக்கையால் பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுவது முக்கியத்துவம் பெறுகின்ற அதே நேரம், சமூகத்தில் பெண்கள் அவர்கள் வாழ்கிற குடும்பத்துள் வன்முறைக்குஉட்படுத்தப்படுவது என்கிற விஷயம் பேசாப்பொருளாக அல்லது மறந்துபோகிறவிடயமாக ஆகியிருப்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்**

போரில்நேரிடையாகவும், மறைமுகமாகவும் பல பிரச்சனைகளை பெண்கள் சந்திக்கிறார்கள். மிக்க உக்கிரமமான பாதிப்புக்களில் யுத்தம் காரணமாக இடப்பெயர்வு நிகழும் நிலையில் அவர்கள் உடல்ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிப்புள்ளாகியும் கணவனை இராணுவத்தின் கைகளில் ஒப்படைத்து விட்டுத் தனித்து நின்று குடும்பத்தை நடத்த வேண்டிய சூழலுக்குள் தள்ளப்படுகின்றனர். இது ஒன்றே, இந்தப் போரில் பெண்கள் நிலையைப் புரிந்துகொள்ளப் பொருத்தமாக இருக்கும். அம்பலத்தில் குடும்பத்தை நடததுவது என்பது பெண்களுக்கு எத்தைகயதொரு மோசமான சூழல் என்பது சிந்திக்க தெரிந்த எவருக்கும் விளங்கும். போர் நடைபெறும்போது பெண்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது ஒரு வெளிப்படையான உரையாடலுக்குரியதாகவும், எதிர்ப்புக்குரியதாகவும் இருப்பது என்பதைக் காணமுடிகிறது. இதுமட்டுமில்லாமல் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு விஷயமும் உள்ளது.

போர்சார்ந்த நடவடிக்கையால் பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுவது முக்கியத்துவம் பெறுகின்ற அதே நேரம், சமூகத்தில் பெண்கள் அவர்கள் வாழ்கிற குடும்பத்துள் வன்முறைக்குஉட்படுத்தப்படுவது என்கிற விஷயம் பேசாப்பொருளாக அல்லது மறந்து போகிற விடயமாக ஆகியிருப்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும், அது குறித்து ஒரு உரையாடல்முன்னெடுக்கப்படவேண்டும் என்பதும் மிகவும் அவசியமாகும். இது பற்றிய சிந்தனைகளில் அடிப்படை மாற்றம் தேவை என்பது மிக முக்கியமாகும்.

ஒரு சமூக விடுதலை என்பது அனைத்து வகையான ஒடுக்குமுறைகளையும் வன்முறைகளையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி எதிர்கொள்ள வேண்டிய செயற்பாடாகவே பார்க்கப்படவேண்டும்.ஒவ்வொன்றாக தனித்தனியாக அல்லது ஒன்று முந்தியது, மற்றது பிந்தியது என்று பார்ப்பதென்பது பொருந்தாது. ஏனெனில், இத்தகைய நிலைகள் என்பது சமூகத்தில் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகவும்,சிக்கல்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்ற சூழலில், சமூகங்களால் புறத்திருந்தும்அகத்திருந்தும் நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகள் பற்றி ஒரே நேரத்தில், ஒரே தளத்தில் நாங்கள் எதிர்கொள்ளவேண்டியது என்பதுதான் யதார்த்தமானதும் இயல்பானதும் பொருத்தமானதும் என்பதை நாங்கள் சிந்தித்துச் செயற்படவேண்டியுள்ளது.

இந்த வகையில் ஈழத்தில் பெண்கள் அமைப்புகள் போரினால் ஏற்படும் வன்முறைகளை எதிர்கொண்டும், குடும்ப சமூக வன்முறைகளை எதிர்கொண்டும், சமூகத்தின் உள்ளிருந்தும், வெளியிருந்தும்தடைகளையும் சவால்களையும் கடந்து செயற்பட்டு வருவது சாதகமானதொரு நிலைமையாகும்.

## அரங்க செயற்பாட்டுகளின் முக்கியத்துவம் பற்றி உங்கள் கருத்து ?

எமது சமூகத்தில் மக்கள் தமக்கு வசதியான, வாய்ப்புள்ள இடங்களான கோயில், வீதி, தெருச்சந்திப்ப, வீட்டு முற்றம், மரநிழல்களில் கூடிக்கதைக்கும் மரபு இருந்தது. இந்தச்சமயங்களில்பல்வேறு செய்திகளையும், சம்பவங்களையும் இதலைப்புகளையும் அதன் சாதக பாதகங்களுடன் அலசி ஆராயும் நிலை இருந்தது. ஆனால் இன்று இனப்பிரச்சனையும் இராணுவ நடவடிக்கைகளும்கூர்மையடைந்துள்ள நிலையில் பொதுமக்களால் கூடிக்கதைக்கும் நிலை இல்லாமல் போனது. மக்களை ஒன்று சேர்க்கவும் தங்களுக்குள் உரையாடிகொள்ளவும் தங்களது தேவைகளை தாங்களே அறிந்துகொள்ளவும் அவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் வழி வகைகளைதீர்மானித்துக்கொள்ளவும்தங்களது ஆற்றல்களை அடையாளம் காணவும், வெளிபடுத்திக் கொண்டாடவும் தாழ்வுச்சிக்கல்களில் இருந்து விடுபட்டுக்கொள்ளவும் படைப்பாற்றல்கள் வெளிபடவும்கூடியகல்வியை, சமூகத்தை, பண்பாட்டை அறிவுத்தளத்தை உருவாக்குவதனுடாக யதார்த்தின் குரூரத்தை விளங்கி கொள்ளாவிட்டாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான வழியினைஅமைத்து இத்தகைய மாய வாழ்கையில் இருந்து எம்மை விடுவித்துக்கொண்டு, எங்களை நாங்கள் புரிந்துகொண்டு பொதுமக்கள் மத்தியில் விவாதங்களை தூண்டவல்ல அரங்குகளின் தேவைஅவசியமாகிறது. அப்பொழுதுதான் எமக்குப் பொருத்தமான மக்கள் மையப்பட்ட விவாதக் களங்களை அரங்க அறிவுடனும்பாரம்பரிய உரையாடல் களங்களின் அனுபவத்துடனும் அறிவுத்தளத்தில்நிகழ்த்துவது முக்கியம் என்கிற உரத்த சிந்தனையும் செயற்பாடும் இன்று அவசியத் தேவையான நிலை உள்ளது என்பது எனது கருத்து

## இப்பொழுது உள்ள அரசியல் சூழலில் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகின்றீர்களா ?

தமிழர்களுக்கு ஓர் நிரந்தரமான தீர்வு இப்போதுள்ள அரசியல் சூழலில் கிடைக்கும் என்று நான் நிச்சயமாக நம்பவில்லை. வெளிப்படையாகச் சொன்னால் நம்பிக்கை இல்லாத அரசியல்கள் தான்இப்பொழுது




நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த அரசியலை முன்னெடுப்பவர்களால் தமிழர்களுக்கு எந்தவிதத்திலும் ஓர் தீர்வை ஏற்படுத்தித் தரமுடியாது. அப்படி ஓர் தீர்வைஏற்படுத்திக்கொடுத்தால் அது அவர்களுக்கான அரசியல் இருப்புகளை இருட்டடிப்பு செய்துவிடும் என்பதே உண்மையானது. இதனால் பாதிக்கப்படுவது அடக்கப்படும் அல்லது நசுக்கப்படும் எமது தேசிய இனம் தான். இத்தகைய நிலையில் இருப்பினைஉறிதிசெய்வதற்கு போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என் நாம் அனைவரும் ஒன்றினைந்து மேலும் வலியுறுத்த வேண்டும் .

**அடுத்த கட்டமாக ஏதேனும் எழுத முயற்ச்சியில் ஈடுபடவுள்ளீர்களா?**

மக்களின் அபிவிருத்தித்தேவையை பூர்த்திசெய்ய பற்றியும் போர் கால இலக்கியங்களையும் யுத்தத்தின் விழுமியங்களையும், அதனால் வருகின்ற சோகங்களையும், அது கூறும் இலட்சியத்தையும் எழுதுகிற சூழல் நேரம் இடம் என் உளநிலை என்பவைதான் அவற்றை தீர்மானக்கிறது. மனம் குழம்பாத சூழலில் ஒன்றிவிடத் துடிக்கிறது. நாங்கள் இயற்கையின் அசைவுகளைக் கண்டு எழுதுகிற சூழல் எங்கே இருக்கிறது நாம் இழந்து விட்ட தேசம் பற்றியும் மனிதப் பேரவலத்தின் போது அனுபவித்தவைகளையும் என் முன் நடந்தேறிய இணப்படுகொவையின் சாட்சியாக அதனுடன் வாழுகிறபோதுஅவற்றினையும் அதன் உளவியல் நிலைப்பாட்டினையும் பதிவு செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

வாழ்த்துகள் உங்கள் முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு மாவீரர்கள் என்றும் துணையிருப்பார்கள் . இந்த நேர்காணலில் என்னுடன் இணைந்திருந்தமைக்கு மீண்டும் எனது நன்றிகள்

**உங்களுக்கும் எனது நன்றி**

**தமிழ்மாறன்**

# FIFA கேள்விப்பட்டிருக்கிறவர்களுக்கு CONIFA தெரியுமா?

இன்றைய FIFA அங்கத்துவர்களான 209 நாடுகளும் ஐ. நா-வில் அங்கத்துவம் பெறும் நாடுகள் என்ற அடிப்படையில்தான் FIFA-வினால் ஒழுங்குசெய்யப்படும் சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபெறச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆனால், ஐ.நா வினால் அங்கீகரிக்கப்படாத ஆனால், தனிப்பட்ட அடையாளங்கள், சிறுபான்மையினர், நாடிழந்து புலம்பெயர்ந்து வாழும் மக்கள் குழுவினர் போன்றவர்கள் எங்கே போய் கால்பந்து விளையாடுவது?

சுவீடனைச் சேர்ந்த பேர் ஆண்டர்ஸ் பிளிண்ட் என்பவர் இப்பிரச்சினைகளைக் கவனித்து கால்பந்து விளையாட்டுக்களில் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் பல மில்லியன் மக்களின் ஏகோபித்த விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக உண்டாக்கிய "கால்பந்து விளையாடுபவர்களின் சுதந்திரமான கூட்டமைப்பு" தான் CONIFA.

ஜேர்மனைச் சேர்ந்த ஸாஷா டுர்கோப் என்பவருடன் சேர்ந்துகொண்டு 2013 இல் இக்கூட்டமைப்பை நிறுவினார் பேர் ஆண்டர்ஸ். அரசியல், பொருளாதார வருமானம் போன்றவற்றை ஒதுக்கிவிட்டு கால்பந்தாட்டத்தை அதன் சுவையை ரசிப்பதற்காகவே இக்கூட்டமைப்பில் இணையலாம் என்று குறிப்பிடப்படுகிறது.

இதன் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் "நாடுகள்" தத்தம் பயண, விசா செலவுகளைத் தாமே கவனித்துக்கொள்ளவேண்டும். அப்காஸியாவில் ஒரு வாரத்துக்கு முதல் நடந்த இக்கூட்டமைப்பின் கால்பந்தாட்டக் கோப்பைக்கான செலவுகளை அப்காஸியாவின் அரசும் ரஷ்யா உட்பட மற்றும் சில உலக நாடுகளால் மட்டுமே இது தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஜோர்ஜியா இதைத் தனது நாட்டின் ஒரு பகுதியென்கிறதுஸ , அந்த நாட்டின் கால்பந்தாட்ட நிறுவனமும் கவனித்துக்கொண்டன.

35 "நாடுகளை" அங்கத்துவர்களாகக் கொண்டுள்ள இந்தக் கூட்டமைப்பிலிருக்கும் 12 "நாடுகள்" போட்டியில் பங்குபற்றின. கடைசிப் போட்டியில் அப்காஸியாவும் "பஞ்சாபும்" மோதின. இறுதியில் பெனால்டி மூலம் அப்காஸியா 6 - 5 வெற்றியெடுத்தது. இவ்வமைப்பின் பட்டியலில் 14 வது இடத்திலிருக்கிறது தமிழீழம். சூடானின் பிரச்சினைக்குரிய பகுதியான டார்பூரை 10 . 0 என்று 2014 இல் நடந்த உலகப் போட்டியில் வென்ற தமிழீழம் குர்திஸ்தானுடன் 0 - 9 என்று தோல்வியடைந்திருக்கிறது. இந்த வருடப் போட்டிக்கு ஏன் தமிழீழம் பங்குபற்றவில்லை?

நன்றி

**சாள்ஸ் போமன்**

# ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட யாழ் கோட்டையின் தூக்குமேடை



தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை